வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 சித்திரை திங்கள் 19-ம் நாள் (1—5—1960) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 4 | இதழ் 43

# தமிழரசுக்கட்சி அபேட்சகர்கள்

## போட்டியின்றித் தெரிவு

## அதற்கான சூழ் நிலை தமிழ் பிரதேசத்தில் எங்கும் உதயம்

### போட்டியிட யாராவது கிளம்பினுல்

### ஊர்ப் பிரமுகர்கள் குழுக்கள் தடுத்து நிறுத்துமாம்

### கட்சி அபேட்சகர்கள் பட்டியலை முன் கூட்டி வெளியிடத் திட்டம்

(சுதந்திரன் விசேஷ நிருபர்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் தமிழ்ப் பிரதேசத்திலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் போட்டியின்றித் தெரிவு செய்யப்படக் கூடிய சூழ் நிலை உருவாகியிருக்கிறது.

அப்படி யாராவது போட்டியிடக் கிளம்பினுல் அந்தந்தத் தொகுதிகள் முக்கிய பிரமுகர்கள் கூட்டாக இயங்கி போட்டியிடக் கிளம்பியவர்களுக்கு நிலைமையைத் தெளிவாக்கி அவர்களைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று தெரிகிறது.

தமிழரசுக் கட்சியும் முன்போல் காலம் தாழ்த்தாமல் இம்முறை தனது அபேட்சகர்கள் பட்டியலை நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் தேதிக்கு மிக முன்னதாகவே வெளியிட்டுவிடும் என்று அறியவருகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெற்று தமிழரசுக் கட்சி மாபெரும் வெற்றியீட்டியது. வெற்றிக்குப் பின்னர் பாராளுமன்றம் நடைபெற்ற குறுகிய காலத்தில் கட்சி நடந்து கொண்ட விதம் முன்னர் பெற்ற நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வலுப்படுத்தி வளர்த்ததே தவிர சீர்குலைத்து சிதைக்கவில்லை.

#### பெரும்பாலும் போட்டியிருக்காது

இன்னும், தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக நின்று ஒரே கட்சியைச் சேர்ந்த 15 பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பியதால் சிங்கள அரசாங்கத்தை ஆட்டிப் படைக்க முடிந்தது என்ற உண்மையும் தமிழ் பேசும் மக்கள் மனதில் பச்சையாக இருந்து பெருமை தந்து வருகிறது. இந்த நிலையில் எதிர்வரும பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் ஒரே பலம் வாய்ந்த கட்சியான தமிழரசு கட்சியின் பிரதிநிதியே தேர்ந்து அனுப்ப வேண்டும்-அதுவும் போட்டியில்லாமல் எல்லாத் தொகுதிகளிலும் என்ற எண்ணம் மக்கள் மனதில் மேலோங்கி நிற்கிறது. அதனுலேயே பெரும்பாலும் போட்டி இருக்காது என்று நம்ப வேண்டியிருக்கிறது.

#### பிரமுகர்கள் குழு

ஒருமாதகாலத்துக்கு முன்பாகவே நடந்த பொதுத் தேர்தலில் மக்கள் மனநிலைமை அறிந்த எவரும் வீம்புக்குத்தானும் தமிழரசுக் கட்சி அபேட்சகரோடு போட்டியிடத் துணிய மாட்டார் அப்படியாராவது போட்டியிடக் கிளம்பினுல் குறிப்பிட்ட தொகுதியில் முக்கிய பிரமுகர்கள் ஒரு குழுவாக இயங்கி சம்பந்தப் பட்ட போட்டி அபேட்சகருக்கு நிலைமையை விளக்கி அவரைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று தெரிகிறது.

#### சிங்களக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியும்

சிங்களக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்ற தேர்தலில் இறங்குகின்றன. ஆனுல் தமிழரசுக் கட்சியோ தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் போராடிப் பெறுவதற்கு தேர்தலில் குதிக்கிறது. இதற்கு போட்டி வேண்டியதில்லை. ஏற்கனவே இந்தப் பணியை ஆற்றி தன் தகுதியை வெளிப்படுத்தியதோடு தமிழ் பேசும் மக்களுக்கு சலாக்கியங்கள் பல பெற்றுக் கொடுத்தும் இருக்கும் தமிழரசுக் கட்சியே இந்த துறையில் தொடர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்-சிங்களவருக்கு உள்ள உரிமை கொழும்பு-தமிழருக்கு இல்லை

### வாக்காளர் ஜாபிதா விஷயத்தில் பாரபட்சம்

(சுதந்திரன் ஒற்று நிருபர்)

கொழும்பு மத்திய தொகுதிக்குரிய வாக்காளர் இடாப்புகள் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போதாவது தமிழிலும் கிடைக்குமா என்று கொழும்புத் தமிழ் வாக்காளர்கள் வினவுகின்றனர்.

கொழும்பு மத்திய தொகுதியில் தமிழ் பேசும் வாக்காளர்கள் 40 வீதத்துக்கு அதிகமானேர் வாழ்ந்தும் வாக்காளர் இடாப்புகள் கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ் மொழியில் வழங்கப் படவில்லை

#### அவகாசமின்மை காரணமாம்

தேர்தலில் போட்டியிட்ட சில தமிழ் பேசும் அபேட்சகர்கள் இதுபற்றி அப்போது கேட்டபொழுது போதிய அவகாசம் இன்மையால் தமிழில் வாக்காளர் இடாப்புகள் தயாரிக்க முடியவில்லையென்று தேர்தல் கமிஷனர் திரு டயஸ் அபயசிங்க கூறினர். இப்போது வாக்காளர் இடாப்புகள் மும்மொழியிலும் தயாரிக்கப்படுவதாக சில பத்திரிகைச் செய்திகள் வெளியானபோதிலும் கொழும்பு மத்திய தொகுதி இடாப்புகள் தமிழில் இன்னும் தயாராகவில்லையென்று சுதந்திரன் ஒற்று நிருபர் தெரிவிக்கின்ருர்.

(8ம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் இலாகாவிலும் புதிதாக 'சிங்களப் பித்து'

### விண்ணப்பதாரர்களுக்கு தனிச் சிங்களப் பத்திரங்கள்!

[சுதந்திரன் நிருபர்]

பொலீஸ் படையில் சேர விண்ணப்பித்து ஆரம்ப பரீட்சைகளில் தேறிய தமிழ் வாலிபர்கள் தங்களுக்குப் புரியாத சிங்கள பத்திரங்களைக் கையில் வைத்துக்கொண்டு செய்வது இன்னது என்று அறியாது திகைத்து அலைகிருர்கள். இதன் பொருட்டு தமிழிலோ, அன்றி ஆங்கிலத்திலோ எத்தகைய தஸ்தாவேஜுக்களும் அவர்களுக்கு வழங்கப்படவில்லையாம்.

நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்ததை அடுத்து தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வாலிபருக்கும் அவற்றை நிரப்பி அனுப்புமாறு சில பத்திரங்கள் வழங்கப்பட்டன. தனிச் சிங்களத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்டிருக்கும் அந்தப் பத்திரங்களில் என்ன கேட்கப்பட்டிருக்கிறதென்பதுகூட அவர்களுக்கு தெரியாது. சிங்களம் தெரிந்த தமிழர்களோ, அன்றி தமிழ் தெரிந்த சிங்களவரோ எங்காவது இருக்கிருர்களாவென்று அவர்கள் ஒவ்வொருவரும் தேடியலைகிருர்கள்.

பொலீஸ் ஜீப் சாரதி பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் முகவரிகூட சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதங்களையே இப்போது பெற்றிருக்கிருர்கள். பொலீஸ் இலாகாவின் இந்தப் பூரண சிங்கள மொழிக் கொள்கை தமிழ் வாலிபர்களை படாத பாடுபடுத்தி வருகின்றது.

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

★ இடைவிடாத இருமல்

★ இளைப்பு

★ மூச்சுத் திணறல்

★ கிர்ர் புர்ர் சத்தம்

★ நெஞ்சுவலி

★ தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினுல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜென்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# அரசாங்கத்தின் ஆதரவும் அக்கறையும் கிராமாபிவிருத்திக்கு தேவை

## நகர மக்களின் ஒத்துழைப்பும் நல்ல பயன் தரும்

### அரசாங்க இலாகாக்கள் இன்று ஆற்றி வரும் பணி போதுமா?

இலங்கையில் எண்ணற்ற கிராமங்கள் இருக்கின்றன. அக்கிராமங்களில் உள்ள மக்கள் பொருளாதாரத்துறையில் முன்னேறுவதைப் பொறுத்தே இந்நாட்டின் பொருளாதார சுபீட்சம் பெருகும். ஆகவே கிராமங்களை முன்னேற்றுவதில் கிராம மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதில், கிராமத் தொழில்களைப் புனருத்தாரணம் செய்வதில் நாட்டைப் பரிபாலிக்கும் அரசியலார் அக்கறைகொள்ள வேண்டும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

கிராமங்களில் வாழும் தனிப்பட்ட நபர்களுடைய முயற்சி அவரவர் பொருளாதார வாழ்க்கைக்கு அவசியமெனினும், தனி நபர் முயற்சி மண்ணையும் பொன்னாக்கும் பாலைவனத்தையும் சோலைவனமாக்கும் என்பது உண்மமே ●யெனினும், அவர்களுடைய முயற்சிக்குத் தூண்டுகோலாக, கிராமவாசிகளின் தனிப்பட்ட முயற்சிகளை ஒருமுகப்படுத்தும் சாதனமாக, அம்மக்களைப் பொருளாதாரத் துறையில் வழி நடத்திச் செல்லும் கருவியாக அரசாங்கம் முன்வந்து ஆவன செய்வது அவசியமாகும்.

அரசாங்க ஆதரவு வேண்டும்

அரசாங்கத்தின் ஆதரவும் அக்கறையும் கிராமத்தவருக்கு இல்லையேல் அவர்களுடைய வாழ்வில் அதிக முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது ஆட்சியாளரின் பொறுப்பாகும். கிராமங்களுக்குத் திரும்பிப் போ என்று வெறுமனே ஆட்சியாளர் கூறுவதால் பயன் ஏற்பட்டுவிடாது; கிராமங்கள் சீர்திருந்திவிட மாட்டா. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், பட்டினிப் பட்டாளத்தைக் குறைக்கவும், காணிப் பிரச்னையைத் தீர்க்கவும், மூலப்பொருள் வளத்தைக் கொண்டு கைத்தொழில்களைப் பெருக்கவும்; நாட்டின் உணவுத் தேவைகளில் சுயதேவைப் பூர்த்தியையடையவும் அரசாங்கம் கிராமங்களை முன்னேற்ற வேண்டும்.

நகரமும் கிராமமும்

பண்டைக்காலத்தில் அலைந்து திரிந்த மனிதர் நிலையாக வாழத் தொடங்கிய காலம் கமத்தொழில் செய்யத் தொடங்கிய காலமாகும். கிராமப் பண்ணைகளில் விவசாயம் ஓங்கி, அவ்விவசாயத்தையொட்டி மற்றத் தொழில்கள் பெருகின. மனப்பண்புக்கும் பண்பட்ட வாழ்க்கைக்கும் பண்ணைகளே காரணமாகவிருந்ததனால் நாகரிகத்தை 'பண்பாடு' என்று வழங்கலாயினர். கிராம மக்கள் சுதந்திரமாக வாழ்பவர்களேயன்றி பிறருடைய உழைப்பை எதிர்நோக்கிப் பிழைப்பவர்களல்லர். சேவையும் உழைப்பும் கிராமப் பண்பாட்டின் இலட்சியங்கள். கிராமத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள், பால், தயிர், மோர், முட்டை முதலியவை நகரங்களிலுள்ள சந்தைகளில் விலையாகின்றன. நகர மக்கள் இவைகளுக்காகக் கிராமங்களை எதிர்பார்த்துப் பிழைக்கிறார்கள். கிராமங்களில் விளையும் பல விளைபொருள்கள் நகரங்களில் காணப்படும் இயந்திரசாலைகளில் செய்பொருளாக மாற்றப்படுகின்றன.

கிராமச் சிறப்பு

இன்னும் நகர மக்கள் வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து சில நாட்களாவது விடுதலைபெற்று, அமைதி, ஓய்வு, ஆரோக்கியம் முதலியவற்றை அனுபவிக்க கிராமங்களை நாடுகிறார்கள். கிராமங்களின் பயன் இத்துடன் நிற்கவில்லை. அரசாங்கத்துக்கு வரும் வரிப் பணத்தின் பெரும் பங்கு கிராம நிலங்களிலிருந்துதான் வருகிறது. இப்பெருந் தொகையைக்கொண்டு நகரங்களில் பெரிய பெரிய காரியாலயங்களும், கல்லூரிகளும், வைத்தியசாலைகளும், விளையாட்டுத் தானங்களும், நூல் நிலையங்களும் நிர்மாணிக்கப்படுகின்றன. கிராமங்களால் உண்டாகும் இத்தகைய பயன்களையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது நாம் கிராமப் பண்பாட்டைக் காப்பாற்றுவதும் அரசாங்கம் இத்துறையில் ஆவனவற்றைச் செய்வதும் எத்துணை அவசியம் என்பது தெளிவாகின்றது.

அ. விஜயன்
விக்டோரியா பி. ஏ.

அரசாங்க அறிக்கை தரும் உண்மை

அரசாங்க உதவி வேண்டுமென்பதுபற்றி நாம் அழுத்தமாகக் கூறுவதற்குக் காரணமில்லாமலில்லை. நம் நாட்டுக் கிராம மக்களில் பெரும்பாலானோர் அறியாமைப் படுகுழியிலும் வறுமையின் கோரப்பிடியிலும் சிக்குண்டு வீழ்ந்து கிடக்கிறார்கள். கடந்த காலங்களில் அரசாங்கப் பகுதிகள் கிராமப் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தி வறிய கிராமங்களை கைதூக்கிவிடுவதற்கு பலவாறு முயன்றும் அம்முயற்சி பூரண வெற்றி தரவில்லையென்றே கருத வேண்டியதிருக்கிறது. அணிமையில் வெளியான இலவசக் கல்விபற்றிய அரசாங்க விசாரணைக் குழுவொன்றின் அறிக்கை இவ்வுண்மையை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது.

கிராமங்களில் இலவசக் கல்வி

அவ்விசாரணைக் குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம் இந்நாட்டில் இலவசக் கல்வி முறை ஏற்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பல்லாயிரக்கணக்கான சிறுவரும் சிறுமியரும் பள்ளிக்கூட வாயிற் பக்கம் தலைகாட்டாமலிருப்பதற்கான காரணங்களை அறிந்து அறிக்கை விடுவது ஒன்றுதான். அவ்விசாரணைச் சபையினர் தெரிவித்துள்ள முடிவின்படி "கிராமப் பகுதிகளில் பள்ளிக்கூடங்கள் இல்லாமலில்லை; பள்ளிக்கூடங்கள் பலவிருந்தும் படிப்பதற்கான வசதிகளிருந்தும், கிராமவாசிகளிற் பலர், தாங்க முடியாத வறுமையின் காரணமாக தம் பிள்ளைகளுக்கு உணவு உடையளித்து, பாடப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து, பராமரிக்க முடியாத நிலைமையிலிருப்பதால்தான் அக்கிராமக் குழந்தைகள் இலவசக் கல்வியின் பயனைப் பெற முடியாது தவிக்கிறார்கள்" என்று அறிகின்றோம். இது எதனை எடுத்துக்காட்டுகின்றது? கிராம மக்களின் ஏழ்மையை, வறுமை நிலையை தெற்றெனக் காட்டுகின்றதன்றோ!!

கிராமப் பொருளாதாரத்தைப் பெருக்குவதில் பல அரசாங்கப் பகுதிகளும் அரசாங்க ஆதரவு பெற்ற பல தாபனங்களும் கடமையாற்றுகின்றன. கிராமப்புறத்தவருக்கு வாழ்வளிப்பதில் முக்கியமாகக் கருமமாற்றும் சில அரசாங்க இலாகாக்கள்பற்றியும் அவை மேற்கொண்டுள்ள பணிகள்பற்றியும் இங்கு காண்போம்.

கிராமாபிவிருத்திப் பகுதி

கிராம முன்னேற்றம், சீர்திருத்தம் என்றவுடனே கிராமாபிவிருத்திப் பகுதி நம் கவனத்துக்கு வருகிறது. கிராம மக்கள் தங்கள் பிரச்னைகளை பிறர் தலையீடின்றித் தாங்களே தீர்க்கவும், தற்காப்புடையவர்களாயிருக்கவும் நாட்டுக்கு நற்பிரஜைகளாவதற்குமான பயிற்சியளிப்பதையே கிராமாபிவிருத்தி இயக்கம் தனது பெருநோக்காகக்கொண்டுள்ளது. உணவுற்பத்தி, சுகாதாரம், கைத்தொழில் எனும் இவற்றில் இப்பகுதி ஈடுபட்டு இப்பிரச்னைகளில் கிராம மக்களுக்கு உதவி செய்து வருகிறது. இவ்விடயத்தில் விவசாய கூட்டுறவுப் பகுதிகளும் காணிப் பகுதியும் வேண்டிய உதவிகளைச் செய்கின்றன. இன்னும் கிராமச் சமுதாய வாழ்க்கையின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கிராமாபிவிருத்தி சங்கங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நீரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

மருத்துவம்:

# புற்று நோய் - அதை விட்டு வைக்கலாகாது

## உடன் சிகிச்சை வேண்டும்

புற்றுநோய் என்ன வகையான நோய்? அது ஒருவித புண் கட்டி அல்லது சதை வளர்ச்சி நோய். அது உடம்பின் எந்தப் பாகத்திலும், எந்த வயதிலும் உண்டாகலாம். என்றாலும், பெரும்பாலும் முப்பத்தைந்து வயதிற்கு மேலேயே உண்டாகும்.

2. புற்றுக் கட்டி பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

சாதாரணக் கட்டிகளைப் போல தோன்றலாம். ஆயினும் இடத்திற்குத் தகுந்தவாறு வேறுபடும். உதாரணமாக, மார்பில் கிளம்பும் கட்டி ஒரு வெள்ளி ரப்பரைப் போலவும் கடினமாகவும் இருக்கும். இரைப்பையிலும் குடலிலும் உண்டாவதோ சிவப்பாகவும், மென்மையாகவும், எளிதில் சிதைந்துவிடக் கூடியதாகவும், இரத்தக் கசிவு உள்ளதாகவும் இருக்கலாம்.

3. இந்த நோயின் காரணம் என்ன?

இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. ஏதாவது ஒரு வேற்றுப் பொருள் உடலில் நெடுநாளாக உராய்ந்து கொண்டிப்பதே காரணம் என்று பெரும்பாலான ... கள். வேறுசிலர், உயிரணுக்கள் ... வாயு கிடையாமல் சீரழிந்து போவது காரணமாக இருக்கலாம் என்று ஊகிக்கிறார்கள்; இன்னும் சிலர் வைரஸ் என்கிறார்கள். ஓர் உருப்பெருக்கிக் கண்ணாடியால் ஒரு கட்டியைப் பார்த்தால், அதிலே பெரும் திரளான உயிரணுக்கள் கட்டு மீறி, தாறுமாறாக நடந்து கொள்வது தெரியும். இந்தக் குழப்பத்தின் காரணத்தை விஞ்ஞானிகள் 'விரைவில் கண்டுபிடித்து விடுவோம்' என்று நம்புகிறார்கள். ஆனால் இப்பொழுதே ஓர் உண்மை ஐயமறத் தெரியும். அது என்ன என்றால், தகுந்த மருத்துவம் செய்து கொள்ளாவிடில், இந்த நோய் உயிரைப் பறித்துவிடும் என்பதே!

4. இது ஒரு கொடுமையான வியாதியா?

ஆமாம்: ஆண்டுதோறும் உலக முழுவதும் ஏறத்தாழ இருபது லட்சம் மக்கள் இதனால் உயிர் துறக்கின்றனர். இவர்களில் பாதிப்பேர் பிழைத்துக் கொள்ள முடியும், துவக்கத்திலேயே ஏற்ற சிகிச்சை செய்து கொள்வார்களானால்! பலருக்கு நோய் இருப்பது கூடத் தெரியாது. ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு தடவை டாக்டரிடம் உடம்பைச் சோதித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம் இதுவே. சோதனையில், நோயின் அறிகுறிகள் புலப்பட்டால்! உடனே பரிகாரம் தேடிக் கொள்ளலாமல்லவா?

5. இந்த நோய் பெரும்பாலும் பெண்களுக்குத்தான் உண்டாகுமா?

அன்று. ஆடவருக்கும் உண்டாகும். பெண்களுக்கு மர்ம உறுப்புகளில் மிகுதியாகக் காணும்; ஆண்களுக்கோ நுரையீரல், இரைப்பை, ஆசனவாய், தோல் ஆகிய இடங்களில் அதிகம்.

6. குழந்தைகளுக்கும் இது வருமா?

வரும், ஆனால் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் சாதாரணமாக இரத்தப் புற்றே உண்டாகும்; விசேஷமாக லியூக்கிமியா என்ற நோய் உண்டாகும்.

7. இந்த நோய் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்குத் தொடர்ச்சியாய் வரக் கூடியதா?

அப்படிச் சொல்வதற்கு அத்தாட்சி இல்லை. ஆனால் அது உண்டாவதற்குத் துணையாக இருக்கக்கூடிய சில இயல்புகள் தலைமுறைத் தொடர்பாக வரலாம். தாய் தந்தையரில் ஒருவருக்கு இந்த நோய் இருந்தால், பின்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

ஏ. சுந்தரலிங்கம், மட்டக்களப்பு

கே: கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கத்தின் தொகுதிக்குப் பிரதிநிதியாக வந்த அட்வகேட் பாலசுந்தரத்தைப்பார்க்கவும் கேட்கவும் மட்டக்களப்பு மக்கள் ஆசைப்படுகிறார்கள். இங்கு அவர் வரமாட்டாரா?

ப: ஏன் வரமாட்டார்? திரு இராஜன் செல்வநாயகத்தின் மீது பொலிஸார் கொடுத்திருக்கும் அத்துமீறிய பிரவேச வழக்கு விசாரணைக்கு வருமானால் அவ்வழக்கில் தெரிபட அட்வகேட் பாலசுந்தரம் கட்சியின் சார்பில் மட்டக்களப்புக்கு நிச்சயம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ

வி. எம். தேவராஜா, நாவற்குடா

கே: கற்பு இழந்த யுவதியை எதற்கு ஒப்பிடலாம்?

ப: கொள்கை இழந்த அரசியல் வாதிக்கு ஒப்பிடலாம். பொள்ளல் விழுந்த ரப்பர் பலூனுக்கும் ஒப்பிடலாம்.

கே: பெண்கள் தாங்கள் செய்த தவறை எப்போது உணர்கிறார்கள்?

ப: அடுத்த மாதத் தவணை வரும்போது உணர்கிறார்கள்.

ஃ

ஆ. லிங்கம், இளவாலை

கே: எனது பக்கத்து வீட்டுப் பெண் ஓய்வு நேரங்களில் என் வீட்டைப் பார்த்தபடி நிற்கிறாள். இதன் மர்மம் என்ன?

ப: அவளாவது உள்ள வேலைகளை முடித்து விட்டு ஓய்வு நேரங்களில் உமது வீட்டைப்பார்க்கிறாள்போல் தெரிகிறது. நீர் வேலை வெட்டி இல்லாமல் சதா அவள் வீட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறதே இதன் மர்மம் என்ன?

ஃ

நா. ராமையா, தெரணியகலை

கே: குயுக்தியாரே, உங்களுக்குப் பிடித்தமான அரசியல்வாதி யார்?

ப: இலங்கையிலா? உலக அரங்கிலா? இலங்கையில் டாக்டர் ச. எம். வி. நாகநாதன், உலகத்தில் குருஷேவ்.

ஃ

அமிர்து, இல்லாலை

கே: யாழ்ப்பாணம் மேயர் திரு அல்பிரட் துரையப்பாவுக்கு தேர்தல் வழக்குத் தொடுத்திருக்கிறார்களே, இது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: என்ன தம்பி, என்னை மாட்டிவைக்கப் பார்க்கிறீரே! கோர்ட்டில் உள்ள வழக்கைப் பற்றி நான் அபிப்பிராயம் சொன்னால் என்னை வேறு கூண்டில் நிறுத்தி விடுவார்களே.

ஃ

துறையூர்க் காந்தன், கல்முனை

கே: தமிழ் பேசும் சாதாரணப் பொது மக்களிடம் அரசியல் விழிப்பை ஏற்படுத்தியவர் யார்?

ப: சாதாரணத் தமிழ்ப் பொது மக்களிடம் அரசியல் விழிப்பை ஏற்படுத்திய பெருமை யாழ்ப்பாணத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையும், மட்டக்களப்பில் திரு. வி. நல்லையாவையும் சார்ந்தது. ஆனால் இவர்கள் இருவருமே பின்னால் வழி தப்பி அரசியல் பாலைவனத்துக்குள் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

ஃ

த கந்தவேள், சுன்னாகம்

கே: வஞ்சத்தைத் தீர்க்கும் மருந்து எது?

ப: வஞ்சத்தைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து தான் உளது. அதுதான் மன்னிப்பு.

ஃ

க. கருணாநிதி, மட்டக்களப்பு

கே: ஈழத்தமிழகம் எப்போது விடுதலை அடையும்?

ப: ஈழத் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கிராமமும் மட்டக்களப்புத் துறை நீலாவணையைப் போலவும் திருகோணமலைச் சாம்பல் தீவைப் போலவும் அரசியல் விழிப்பும் ஆர்வமும் என்று அடைகிறதோ அன்றே ஈழத் தமிழகம் விடுதலை அடைந்து விடும்.

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெட்டி 1183.
> கொழும்பு-12.

ஃ

எஸ். கே. பரமேஸ்வரி, மூந்தல்

கே: இலங்கையில் ஆண்களுக்கா பெண்களுக்கா அதிக அதிகாரம் உண்டு?

ப: நிச்சயமாய் பெண்களுக்குத்தான்! ஆபீஸில் அதிகாரம் செலுத்தும் ஐயா கூட வீட்டுக்கு வந்தால் அம்மாவுக்கு அடங்கித் தோப்புக் கரணம் போட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறதே.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் காலித் தஹநாயகா இழந்த தமது ஸ்தானத்தைப் பெறுவாரா?

ப: நிச்சயம் பெறுவார், மற்றும் சிலர் அவர் கட்சியில் வெற்றி பெற்று வருவார்கள்.

ஃ

ச. பெரியதம்பி, கோப்பாய்

கே: சிவாஜி, எம். ஜி. ஆர். ஜெமினி இவர்களில் [illegible] சிறந்த சோக நடிகர்?

ப: எம். ஜி ஆருக்கு வீரம் வருமே தவிர சோகம் வராது. ஜெமினிக்கு காதல் வருமே தவிர வீரமோ, சோகமோ வரவே வரா. சிவாஜிக்கு எல்லாம் வரும்.

ஃ

சிவஒளி, அல்வையூர்

கே: திருவள்ளுவர் ஏன் திருக்குறள் இயற்றினார்?

ப: வள்ளுவர் திருக்குறள் இயற்றவில்லை. வெறும் குறள் தான் இயற்றினார் குறளுக்கு திருக்கேற்றி அதைப் பொது மக்கள் இலேசில் தொட்டு விடாதபடி பலங்காட்டி வைத்தவர்கள் பழம்பண்டிதர்கள் என்று சொல்லப்படுகிறது.

ஃ

பொ. தங்கநாயகி, கிரான்

கே: தஹநாயகாவின் எல். பி. பி. கட்சியில் சேர்ந்த முதலியார் காரியப்பர் இப்போது யு. என். பியில் திரும்பவும் சேரப் போகிறாராமே, உண்மையா?

ப: காரியப்பரை யார் சேர்த்துக்கொண்டாலும் முடிவில் சேர்த்துக் கொண்டவர்களின் முகத்தில் கரி அப்புவதுதானே காரியப்பர் கண்ட அரசியல்.

ஃ

ஜே. டி. ரெத்தினபாண்டி, யாழ்ப்பாணம்

கே: கனவிலே கண்ட ராஜகுமாரிக்காகக் காலமெல்லாம் சுற்றியலைந்த ராஜகுமாரன் கதையைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இரியகொல்லை மந்திரிப் பதவியொன்றிற்காகச் சுற்றியலைவது இந்தக் கதையைப் போன்றதுதானே!

ஃ

ம. சந்தியாப்பிள்ளை, பாலைக்குழி

கே. தலைமயிர் நரைப்பது ஏன்?

ப: தலைமயிர் கறுக்கும் தைலம் என்று ஏமாற்றுபவர்களுக்கு பிழைப்புத் தேடிக் கொடுப்பதற்காக.

ஃ

க. கணபதிப்பிள்ளை, புற்றனை

கே: [illegible] உண்டா?

ப: உண்டு என்பாரும் உளர். இல்லை என்பாரும் உளர். ஒவ்வொருவருக்கு கிடைக்கும் மனைவியைப் பொறுத்தது இந்த அபிப்பிராயமாகும்.

கே: எங்கள் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களைச் சிலர் 'கிழவன்' என்று கூறுகிறார்கள். "அந்தக் கிழவனுடைய கண்ணோடு தமிழர் சுதந்திரம் அடைய வேண்டும்" என்று சொல்கிறார்கள். 'கிழவன்' என்று கேட்கும் போது எனக்கு ஆத்திரம் வருகிறது. அப்படிச் சொல்லக் கூடாதல்லவா?

ப: கிழவன் என்ற பதம் அப்படி ஒன்றும் கெட்ட பதம் அன்று. கிழவன் என்றால் வயதில் அதிகமானவர் என்றும் பொருள் படும் அதே சமயத்தில் அறிவாளன், தலைவன், உரியோன், அனுபவத்தில் முதிர்ந்தவர் என்றும் நல்ல பொருளைத் தரும்.

ஃ

ஆ. பி. ரெ. தேவி, மன்னார்

கே: காதல் ஏற்பட்டவுடன் கடிதமும் பறக்கிறதே. காரணம் என்ன?

ப: நேரில் சொல்ல முடியாததைக் கூடக் கடிதத்தில் சொல்லிவிடலாம் என்பதனால். வெளிச்சத்தில் செய்ய முடியாததை இருட்டில் செய்து விடுவதைப் போல.

## இது பழைய கோபந்தானே?

[சோமலிங்கம்]

நெஞ்சென்ற பஞ்சணையில் முகம் புதைத்து
நெடுங் கூந்தல் தனைநிலத்தில் படர விட்டு
மஞ்சத்தில் நாம் கொஞ்சி அணைந்த போது
மதலையெனத் தவழ்ந்து வந்த குளிர்ந்த
[தென்றல்

துஞ்சாமல் சுகப்பாடம் நடத்தும் நம்முள்
துளி அளவும் நுழைவதற்கு முடியா தென்று
அஞ்சியே சென்றதுண்டு; ஆனால் இன்று
அனலாகத் தீய்க்குதடி வஞ்சம் தீர்க்க.

கன்னத்தைக் கலைமதியின் ஓரம் ஒட்டி
களிகொண்டு வெறியுண்ட உடலம் ஒட்டி
முன்னம் நாம் ஒன்றாக அணைந்த போது
முண்டகத்தைக் கொஞ்சு தென்றல்
புகுவதற்கு
சின்ன ஒரு வழியின்றிச் சென்றதாலோ
சினம் தீர்க்கத் தியாகத் தீய்ந்து நம்மை
புண்ணடையச் செய்யுதடி உடல மெங்கும்
பொசுக்குதடி இதுபழைய கோபந்தானே?

# சரி..., பார்ப்போம்!

## சிங்கள 'சியரட்ட' தலையங்கம்

**யு. என். பி.** கட்சி வெளியிடும் சிங்களப் பத்திரிகையான "சியரட்ட" 22—4—60 இதழில் தீட்டப்பட்டுள்ள தலையங்கம் தமிழையும் தமிழ் பேசும் மக்களையும் பொறுத்தவரையில் அந்தக் கட்சியின் நிலைமை என்ன என்பதை ஓரளவு தெளிவு படுத்துவதாய் அமைந்திருக்கிறது. அத் தலையங்கத்தின் முக்கிய பகுதிகள் இங்கு தமிழில் தரப் படுகின்றன

இலங்கைவாழ் சிறுபான்மை மக்களின் உரிமைகளை அரசியல் திட்டத்தையே மாற்றியமைத்து உதவ தமது தேர்தல் பிரசாரங்களில் உத்திரவாதம் கொடுத்த ஐக்கிய தேசிய கட்சி, அந்தக் குறிக் கோளை நிறைவேற்ற "பெடரல்" கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது யூதன் ஷைலொக்கைப் போல 'ருத்தல் இறைச்சி' கேட்டு நின்ற "பெடரல்" கட்சி டட்லி சேனநாயகா அரசாங்கத்தை வீழ்த்தும் துஷ்டப் பிரயத்தனத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் சார்ந்து நிற்க முனைகிறது என்று கேள்விப்படுகிறோம். நாடும் ஜாதியும் எக்கேடு கெட்டாலும் ஒரு நாளைக்காவது பிரதமர் பதவி வகிக்க ஆசைப்படும் எதிர்க்கட்சியினர் "பெடரல்" கட்சியின் ஷைலொக்கை ருத்தல் இறைச்சி வெட்டுவதற்கு இடமளித்து (சிங்கள) ஜாதியின் ஜீவனை நசுக்கி விட ஆயத்தப்படுவதும் விளங்குகிறது.

### உடன்படிக்கைக்கு விரோதிகள்

இவ்விரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து செய்யப்போகும் செப்படி வித்தை என்னவோ? நாட்டை இரண்டாக தகர்க்கும் பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கைக்கு உயிரளித்து நம் ஜன்ம பூமியின் ஒருமையைத் தகர்ப்பதா? "பெடரல்" கட்சியின் திரு நாகநாதன் கூறியதுபோல் மேற்படி உடன்படிக்கைக்கு நாம் அன்றும் விரோதிகள்... இன்றும் விரோதிகள் இனியும் விரோதிகள் தான். எப்போதைக்குமே அவ்வுடன்படிக்கைக்கு எம் எதிர்ப்பை கூறுகிறோம். அரசாங்கத்தை தற்போது நாம் கையேற்றிருக்கும் காரணத்தால் நாட்டை இரண்டு படுத்த இடமளிக்கவோ, அப்படி இடமளித்து நமது சொந்த குறிக்கோளை இழிவுபடுத்தவோ ஐக்கிய தேசிய கட்சி எது விதத்திலும் ஆயத்தமாயில்லை.

### ஆபத்துகள்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பிரதானமாய் அன்று இடம் வகித்து எம். ஈ. பி. அரசாங்கம் உண்டாக்கிய இந்த துஷ்ட உடன்படிக்கையை நாம் எதிர்த்தது ஏன்? அதற்கு விரோதமாய் நாம் பல முக்கிய நடவடிக்கைகள் எடுத்ததும் ஏன்? அதனால் நாடு இரண்டாக்கப்பட்டு விடும் என்பது மட்டுமல்ல, அது நடைமுறைக்கு வரின் சிங்கள மக்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் துண்டாக இடமில்லாது போய்விடுவது மட்டுமல்ல, வடமத்திய மாகாணத்திலும் ஒரு பகுதி போய்விடும். இலங்கையில் ஈடேற்றி வந்த எத்தனையோ திட்டங்களில் பெரும் பெரும் பாகங்கள் சிங்களவரிடமிருந்து பறிபோகும். அப்பிரதேசங்களில் ஒரு சிறு காணியை வாங்கிக் கொள்ளவோ, கூலி வேலை செய்து பிழைக்கவோ சிங்கள மக்களுக்கு நீதி மார்க்கமாய் தடை ஏற்பட்டுவிடும். அதுமட்டுமல்ல, "நாகதீவு", "சேருவாவில" என்னும் அற்புத புத்தமத ஸ்தலங்களை நம் புத்த மதத்தினர் என்றைக்குமே இழந்து விட நேருவதோடு உலகிலேயே மிகவும் உன்னதமாகக் கருதப்படும் திருகோணமலைத்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (வைகாசி)

பரீட்சைத் துணை நூல்கள்

இலங்கையின் எல்லா ஆசிரிய கலாசாலைகளிலும் எமது மாணவர்கள் பயிற்சி பெறுவது எமது பாடங்களின் தரத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நீங்களும் எமது பரீட்சைத் துணை நூல்களைப் பெற்று சித்தியை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

- தமிழ்ப் பாஷை ரூ. 12-50
- எண் கணிதம் ரூ. 12-50
- பொது விவேகம் ரூ. 12-50
- பூமிசாஸ்திரம் ரூ. 12-50
- சரித்திரம் ரூ. 12-50
- 101 நவீன கட்டுரைகள் ரூ. 5-00
- கடந்தகால வினாவிடைகள்

ஒவ்வொரு பாடத்துக்கும் விலை ரூபா 3/-

தபாற் செலவு 35 சதம்.

வி. பி. பி. கிடையாது.

இலவச விபரங்கட்கு:

அற்லஸ் ஹோல்

723, மருதானை ரேட்,

தபாற் பெட்டி :649

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைப்பட்டிருந்த தொழிலாளி உரிமைப் போர் தொடுத்து வெற்றி கண்ட திருநாள் மே முதல்தேதி

## உலகெங்கும் விழா எடுத்தால் மட்டும் போதாது—ஒற்றுமையும் கட்டுப்பாடும் வேண்டும்

## அப்போதுதான் பாட்டாளி மக்கள் பெருமை பெறுவர்—பயன் அடைவர்

இற்றைக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன் அறியாமையிருள் எங்கும் பரவிக் கிடந்தது. முதலாளி வர்க்கத்தினரின் சர்வாதிகார ஆட்சி அன்று நிலவிக் கொண்டிருந்தது. அவர்கள் இட்டதுதான் சட்டம். பகல் இரவென்று பாராது தொழிலாளி உழைத்தான். ஆனல் அதற்கேற்ற ஊதியம் அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. இதை எதிர்த்துப் பேசினுல் வேலையே போய் விடும். அல்லது கடுமையான தண்டனை கிடைக்கும். இதனுல் தொழிலாளர்கள் எதிர்த்துப் பேசச் சக்தியற்று சோம்பிக் கிடந்தனர்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் தொழிலாளர் கையில் தான் தங்கியிருக்கிறது. அத்தகையவர்கள், கேவலம் ஆடு மாடுகளைப் போல் நடத்தப்பட்டனர். ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கூடிய உழைப்பு, ஆனல் குறைந்த கூலி ஆண், பெண், சிறுவர், சிறுமியர் யாவரும் வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப் படுத்தினர். இப்படி நசுக்கப்பட்ட தொழிலாளர்கள் எண்ணற்றோர்.

### தொழிலாளர் உறுதி

எத்தனை நாளைக்குத்தான் அடக்குமுறை நிலை நிற்கப் போகிறது! காலம் கரைபுரண்டு ஓடிக்கொண்டேயிருந்தது. தொழிலாளர்கள் விழிப்புணர்ச்சி பெற்றனர். தாங்கள் நசுக்கப்படுவதை உணர்ந்தனர். இந்தச் சீரற்ற வாழ்வைச் செப்பனிட வேண்டுமென்று உறுதி பூண்டனர்.

### போராட்டம்

1886-ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரமே திரண்டெழுந்தது. 16 மணி நேர வேலையை 8 மணியாகக் குறைக்க வேண்டுமெனக் கேட்டனர். போராட்டம் ஆரம்பமாகியது. இப்போராட்டம் மே மாதம் 1-ம் தேதியில் ஆரம்பிக்கப்பட்டது. எனவேதான் இன்றும் இந்த நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மே மாதம் 1-ம் தேதி தொழிலாளர்களுக்கோர் பொன்னுளாகும். தொழிலாளர்கள் ஒன்று கூடித் தங்கள் உரிமைக் குரலை எழுப்பிய தினம் மே முதல் தேதி. இதை யாரும் மறக்க முடியாது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அருணு

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

### பிணவாடை

தொழிலாளி முதலாளியென்ற இரு சாராரிடையேயிருந்த திரை விலகியது. முதலாளி வர்க்கத்தின் அதிகார வெறிக்குச் சாவு மணியோசை கேட்டது. அவர்களுக்குக் கிலி பிடித்துக்கொண்டது. இதை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமெனக் கண்டனர். துப்பாக்கி கொண்டு சுட்டனர். சிக்காக்கோ நகரத்திலே பிண வாடை வீசியது

### கண்டனம்

எத்தகைய கேவல நிலையிது! மனிதனை மனிதன் என்று மதிக்கும் தன்மை கூட அன்று இல்லையே. மனிதன் என்றும் ஏமாளியாகவே இருந்து விடுவதா? மனிதனுக்கு மனிதன் அடிமையாவதா? இல்லை, என்றே ஒரு நாள் விடிவு ஏற்படத்தான் செய்யும். இதை உணர்ந்த தொழிலாளர்கள் யதேச்சாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்தனர். முதலாளிமாரின் வெறிச் செயலை எதிர்த்து 'எய்மார்க்கட்' என்ற இடத்தில் 30 ஆயிரம் தொழிலாளர்கள் ஒன்று கூடினர்.

### மலைபோல் மக்கள் கூட்டம்

மக்கள் கூட்டம் மலைபோல் திரண்டது. இக்கூட்டத்தினிடையே அரசாங்கம் தலையிட்டு கேவலம் ஆடு மாடுகளைப் போல் அவர்களைச் சுட்டுக் குவித்தது. அந்த இடத்தில் இரத்த ஆறு ஓடியது. குருதி கொட்ட உழைத்த தொழிலாளர்கட்கு அரசாங்கம் கொடுத்த பரிசு இதுதான். தொழிலாளர்கள் இதைக்கண்டு பயந்து விடவில்லை பணிந்து விடவுமில்லை. எதுவரினும் தயங்காது எதிர்த்து நின்றனர்.

### உலகுக்கு செய்தி

1888-ல் 'தொழிற் கூட்டு மகாநாடு' என்ற பெயருடன் ஒரு மகாநாட்டைக் கூட்டினர். இம் மகாநாடு உலகிலுள்ள தொழிலாளர்கட்கெல்லாம் ஓர் செய்தியை விடுத்தது. அதாவது உலகிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமது நாட்டின் நிலைக்கேற்பப் போராட வேண்டுமென்பதே அச் செய்தியாகும். இந்த வேண்டுகோளை ஐரோப்பிய நாடுகளும் ஏற்றுக்கொண்டு 1890-ம் ஆண்டு மே முதல் தேதியில் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது 'மே தினப் போராட்டம்' என்னும் பெயருடன் உலகமெங்கும் பரவியது. இந்தப் போராட்டத்தில் சிலர் உயிரைப் பலி கொடுத்தனர். பலர் படுகாயமுற்றனர். இறுதியில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆமாம், 8 மணி நேர வேலைத் திட்டம் படிப் படியாக உலகமெங்கும் அமுல் நடத்தப் படலாயிற்று.

(5-ம் பக்கம் பார்க்க)

---

## லண்டனில் தமிழ் வருஷப் பிறப்பு விழா

லண்டன் தமிழ் சங்கத்தின் ஆதரவில் லண்டன் மாநகரில் தமிழ் வருஷப் பிறப்பு விழா திரு. எம். அழகப்பன் தலைமையில் மகாத்மா காந்தி மண்டபத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகுமுன் சங்க அங்கத்தவர்களுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் மத்தியானப் போசனம் சங்கத்தால் வழங்கப்பட்டது.

சங்கத் தலைவர் டாக்டர் சேகர் தமிழ் வருஷப் பிறப்புப் பண்டிகையைப் பற்றி சில வார்த்தைகள் கூறி விழாவை ஆரம்பித்து வைத்தார். நடப்பு வருடத்திற்கு கீழ் கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு எம். அழகப்பன், உப தலைவர்: திருமதி. கே. கனகசுந்தரம் (லண்டனிலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனரின் துணைவியார்), செயலாளர்: திரு. எல். மெய்யப்பன், உப செயலாளர்: திருமதி. வில்பிறட், தனதிகாரி: திரு. சிவபதி, கணக்குப் பரிசோதகர்: திரு. ஜேம்ஸ், நிர்வாகக் குழுவினர்: திரு. என். சுப்பரோ, திரு பேசில் நவநேசசிங்கம் ஜோசப், திரு. சுப்பிரமணியம், திரு. இராசகோபாலன், திரு. திருஞானச்சந்திரன், திரு. குமாரவேலு, திருமதி. சுலோசனு இராசரத்தினம், திருமதி. சுவாமிநாதன், டாக்டர் சேகர், திரு. பத்மராசா, திரு. முருகையா.

புதிய தலைவர் திரு. எம். அழகப்பன், முன்னுள் தலைவருக்கும், மற்றும் சங்க நிர்வாகிகளுக்கும் அவர்களின் கடந்த வருடச் சேவையைப் பாராட்டி, தனது பதவியை ஏற்று விழாவை நடாத்தினுர்.

மிஸ். ராகவனின் பரத நாட்டியமும், குறத்தி நடனமும் நடை பெற்றது. ஆங்கில வித்வான்களாகிய திரு. டேவிட் வாறனும் திரு. இல்லரும் மேல்நாட்டுச் சங்கீதக் கச்சேரி நடத்தினுர்கள்.

பின்னர் தேநீர், சிற்றுண்டி விருந்துபசாரம் நடைபெற்றது. மிஸ். சுபோதினி தம்பியையாவின் பரத நாட்டியம் இடம் பெற்றது.

---

## அரசாங்கத்தின் ஆதரவும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்கு முயன்று ஓரளவுக்கு வெற்றியும் கண்டு வருகின்றன.

### வழக்காடும் வழக்கம்

கிராமவாசிகள் வழக்காடுவதில் அதிக விருப்பமுடையவர்கள். இதனுல் இவர்களது அரிய நேரமும் அரும்பாடு பட்டுத் தேடிய பணமும் வீணுகப் போகின்றன! நீதி மன்றங்களில் வாதிக்கும் நியாயவாதிகளை செல்வராய் வர, இக்கிராமவாசிகள் மென்மேலும் வறுமைக்காளாகின்றனர். கிராமவாசிகளுக்கிடையே நடைபெறும் பிணக்குகளைச் சமரச சபைகள்மூலம் தீர்ப்பதால் கிராமத்தாருடைய பணமும் காலமும் மிச்சப்படும்; அவர்களின் பொருளாதாரமும் பாழ்படாது.

### குடிசைக் கைத்தொழில் பகுதி

அடுத்ததாக, கிராமாபிவிருத்திப் பகுதியுடன் இணைத்துள்ள மற்றொரு பகுதியாகிய குடிசைக் கைத்தொழிற் பகுதியும் கிராம மக்களின் பொருளாதாரம் ஓங்குவதற்குத் துணை செய்கின்றது. கிராமவாசிகள் பொருளாதார வளர்ச்சிக்கு குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி அதிமுக்கியமானதாகும். கிராமத்திலுள்ள கைவினைஞரின் பாரம்பரிய திறமை அழிந்துவிடாதபடி குடிசைத் தொழில்கள் தடுப்பதோடு, அவர்களது சிவனோபாயத்திற்கும் அவை வழி தேடிக் கொடுக்கின்றன. பெட்டி கடகம் இழைத்தல், மட்பாண்டம் வனைதல், பனம்பொருள் சார்பான குடிசைத் தொழில்களைச் செய்தல், தச்சுவேலை செய் [illegible] யடிவாழையாக வந்த கைவினைத் திறமையைவளர்த்து இத்தொழில்கள் விடயமாய் கிராம மக்களுக்குச் சாதனை மூலமாகப் பயிற்சியளித்தும், தனது குடிசைக் கைத்தொழில் ஆசிரியர்களின் உதவியைக் கொடுத்தும் குடிசைக் கைத்தொழிற் பகுதி கடமையாற்றுகின்றது. கிராமப் பொருளாதார நலங் கருதியே இப் பகுதி இக் கைத் தொழில்களுக்கு உதவி செய்கின்றது.

### விவசாய கால் நடைப் பகுதி

பண்ணைத் தொழில்களை விருத்தியாக்குவதன் வாயிலாக கிராமப் பொருளாதாரத்துக்கு உழைக்கும் அரசாங்கப் பகுதி விவசாய கால் நடைப் பகுதியாகும். கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை ஆடு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, வாத்து வளர்ப்பு போன்ற பண்ணைத் தொழில்களை அபிவிருத்தி செய்து, அத் தொழில்களை விஞ்ஞான ரீதியில் செய்வதற்கான ஆராய்ச்சிகளையும் ஆலோசனைகளையும் கிராமப் பண்ணைக்காரர்களுடன் பகிர்ந்து, விவசாயப் பகுதியும் கால்நடைப் பகுதியும் கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கத் துணை செய்யலாம். இன்னும் விவசாயத்தை விருத்தி செய்வதிலும் காய் கறிவகைப் பயிர்களையும் பழமர இனங்களையும் பெருக்குவதிலும் விவசாயப் பகுதி கிராமத்தவருக்கு உதவி செய்வதால், கிராமத்தவரின் வருவாய் உயர்ந்து, வாழ்க்கைத் தரமும் உயர ஏதுவாகும்.

### இளம் விவசாயிகள் சங்கம்

நெற்காணிச் சட்டத்தை அமுல் நடத்துவதிலும், பயிர் இன்ஷூரன்ஸ் திட்டமொன்றைச் செயலாற்றுவதிலும் விவசாயப் பகுதியார் ஏழைக் கிராமத்தவர் நலன் கருதி உழைப்பது அவர்கள் அண்மைக் காலத்தில் மேற்கொண்டுள்ள பணிகளில் மகத்தானவையாகும். இவை தவிர, இளம் விவசாயிகள் சங்கம் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டு, அச் சங்கங்கள் வேளாண்மையில் நவீன முறைகளைக் கையாள்வதும், பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிப்பதும், கால் நடை வளர்ப்பு மற்றும் பண்ணைத் தொழில்களை மேற்கொண்டு வருவதும், கிராம மக்களது வாழ்க்கையில் விவசாயப் பகுதி அக்கறை கொண்டு, இளம் விவசாயிகள் மூலம் கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்த முயற்சிப்பதைக் காட்டும் அறிகுறிகளாகும்.

### கூட்டுறவு இயக்கம்

அனைத்துக்கும் மேலாக, கிராம வாசிகளுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து, மக்கள் இயக்கமாக இயங்கி அவர்களது அன்றாட வாழ்க்கையில் இணைந்து, அவர்களிடையே "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" எனும் உண்மையை உணர்த்திவரும் பகுதி கூட்டுறவு இயக்கமாகும். கிராமப் பகுதிகளில் வாழ்வோர் அனைவருக்கும் அவர்கள் விவசாயிகளாயினும் சரி, விற்பனையாளராயினும் சரி, சிறு தொழில் வினைஞராயினும் சரி, பொருள் பாவிப்போராயினும் சரி, கூட்டுறவு இயக்கம் தொண்டாற்றுகின்றது. கூட்டுறவுப் பகுதியில் ஐக்கிய நாணய சங்கம் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவியளித்து வருகிறது.

(13-ம் பக்கம் பார்க்க)




சி. சி. சி.

தாவர உரப்பசளைக் கலவைகள்

அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது


எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந்தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு கொமேர்ஷியல் கம்பனி லிமிட்டெட்,

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.]

தபால் பெட்டி 33, கொழும்பு.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தமிழ் மக்களின் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி

## ஒரே கொள்கை சுதந்திரம் தான்

## இதை உலகறியச் செய்ய தமிழ் மக்கள் அடுத்த தேர்தலில் தவறக் கூடாது"

### சென்னை பொதுமக்கள் பத்திரிகை 'தினத்தந்தி' தலையங்கம்

இலங்கை தமிழரசுக் கட்சி திரு. டட்லி சேனநாயகாவின் அரசாங்கத்தைக் கவிழ்த்தது சம்பந்தமாக சென்னைப் பொது மக்கள், தென்னகத்தின் தமிழ் மக்கள், என்ன நினைக்கிறார்கள்? 'திரு செல்வநாயகம் செய்தது சரிதான்' என்பதே அவர்கள் தீர்ப்பாகும். இந்தத் தீர்ப்பைப் பிரதிபலிக்கும் முகமாக சென்னையிலிருந்து வெளிவரும் பொது மக்கள் தினசரியான "தினத்தந்தி" 26—4—60 இதழில் "அலைபாயும் அரசியல்" என்று ஒரு ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது. அது வருமாறு:

இலங்கையில் சேனநாயகா அமைச்சரவை கவிழ்ந்ததைத் தொடர்ந்து, சட்டசபை கலைக்கப்பட்டு, மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த கட்டளையிடப்பட்டு இருக்கிறது!

ஆளுங்கட்சி கவிழ்ந்ததால், அடுத்த பெரிய கட்சியை அழைத்து, அமைச்சரவை அமைக்கக் கேட்டுக்கொள்ளாமல், சட்டசபையைக் கலைத்தது மக்களாட்சிக்கு முரணானது அல்லவா என்ற கேள்வி எழுவதுடன், நம் அருகில் உள்ள இலங்கையில் நிலையான அரசாங்கம் ஏற்படாமல், அலைபாய்ந்து கொண்டு இருப்பது கவலையையும் தருகிறது.

#### காரணம் என்ன?

உறுதியான அரசாங்கம் அமையாததற்குக் காரணம், ஆளுக்கொரு கட்சி வைத்துக்கொண்டு இருப்பது மட்டுமல்ல; சிறுபான்மையினராக இருக்கும் தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்படுவதும் முக்கியமான காரணம் ஆகும்!

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாததால், சேனநாயகா வீழ்ச்சி அடைந்தார். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத வரை, அடுத்து வரும் அமைச்சரவைகளுக்கும் இந்தக் கதி தான் ஏற்படும். தமிழ் மக்களுக்கு சுதந்திரம் (தன்னாட்சி உரிமை) வழங்கினால் அல்லாமல், இலங்கையில் உறுதியான அரசாங்கம் அமையவே அமையாது!

தமிழர்களுக்கு சுதந்திரம் தர வேண்டும்; தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; தோட்டப் பகுதிகளில் வாழும் பத்து இலட்சம் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும்; தமிழர் பகுதியில் சிங்களவர்களை குடியேற்றக் கூடாது என்ற, 'தமிழர் தந்தை' செல்வநாயகத்தின் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளாததால் தான், சேனநாயகா வீழ்ச்சி அடைந்தார்! இவருடைய கடந்த கால நடவடிக்கைகளை அறிந்தவர்கள், செல்வநாயகம் விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருந்ததை பாராட்டத்தான் செய்வார்கள்.

தமிழர் வாழும் பகுதிகளில் தமிழ் ஆட்சி மொழியாக வழங்க வகை செய்யும் பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து, ஒழித்தவர் சேனநாயகா தான்! பத்து இலட்சம் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தவர், சேனநாயகாதான்! இதன் மூலம் சட்டசபையில் தமிழர்களின் பலத்தை குறைத்தவரும் இவரே! இப்படிப்பட்டவர் வீழ்ச்சி அடைந்தது, தமிழர்களுக்கு வெற்றியே ஆகும்!

மீண்டும்பொதுத் தேர்தல் வந்திருப்பதால் தமிழ் மக்களுக்கும் புதிய பொறுப்பு வந்து இருக்கிறது. 'செல்வநாயகம் செய்தது சரிதான்!' என்று தேர்தலில் தீர்ப்பு வழங்க வேண்டும்.

சட்டசபையில் தமிழர்களுக்கு 23 இடங்கள் இருக்க, 15 இடங்கள் தான் தமிழரசு கட்சிக்குக் கிடைத்தது. இத்தடவை எல்லா இடங்களுமே தமிழர் கட்சிக்குக் கிடைக்க, அதன் மூலம் தமிழ் மக்களின் ஒரே கட்சி தமிழரசுக்கட்சி தான்—ஒரே கொள்கை சுதந்திரம் தான் என்பதை உலகறியச் செய்ய, தமிழ் மக்கள் தவறக்கூடாது!

தமிழர்களிடமும் பல கட்சிகள் இருக்கின்றன. சென்ற மாதம் நடந்த பொதுத் தேர்தலில், இக்கட்சிகளின் தலைவர்கள் படுதோல்வி அடைந்தார்கள். ஆகவே, வருகிற பொதுத் தேர்தலில் இவர்கள் விலகி நின்று, தமிழ் மக்களின் தீர்ப்பை மதித்து நடக்க வேண்டும்.

## தமிழரசுக் கட்சியை குறை சொல்ல முடியாது

### லண்டன் 'கார்டியன்' பத்திரிகை வெளியிட்டுள்ள கருத்து

லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல பத்திரிகையான கார்டியன் இலங்கை அரசியல் நிலைமை பற்றி கடந்த 23ந் தேதி எழுதிய தலையங்கம் ஒன்றில் தமிழரசுக் கட்சியை குறை சொல்ல முடியாது என்றும் அது நடந்துகொண்ட விதம் சரிதான் என்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது.

கார்டியன் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

### Mr. Senanayake fails

Mr. Senanayake's Government, as expected, has been defeated on its first vote of confidence, and Mr. Senanayake will to-day ask the Governor General, Sir Oliver Goonetilleke, to dissolve Parliament so that fresh elections can be held. However, the Leader of the Opposition, Mr. C. P. de Silva, thinks that he will be able to command enough parliamentary support to form a Government himself, and Sir Oliver, for various reasons, may want to give him a chance to try. His own party, the Sri Lanka Freedom party, won only forty-six seats in last month's general elections to Mr. Senanayake's fifty. But with the help of some smaller parties and the six appointed M. Ps he may be able to scrape up a majority. Whether it can last will depend largely on the attitude of the Federal party

(9-ம் பக்கம் பார்க்க)

## சரி..., பார்ப்போம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகமும் சிங்கள மக்களுக்கு இல்லாமல் போய் விடும்.

சிறுபான்மையினருக்கு சர்வ சாதாரணமான உரிமைகளைக் கொடுக்க நாம் ஆயத்தமாயிருக்க இலங்கை மாதாவின் தேகத்தில் இறைச்சி ருத்தலையேகேட்டு மன்றாடுகின்ற கவ்வின. "பெடரல்" கட்சியின் கொள்கைகளை நாம் நிராகரித்தது மேற்கூறிய காரணங்களுக்காகத்தான். ஆனால் ஒன்றிரண்டு நாட்களுக்காவது "ராஜா"வாக காத்திருக்கும் அதிகார ஆசை படைத்தவர்கள், பதவியைக் கட்டிக் கொள்ள நாட்டையே பலியிட ஆயத்தப்படுகிறார்கள் என்று தெரிகிறது. அதே போல் ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைத்துவிட்டு அரிவாள்—சுத்தியல் கொண்ட ரத்தக் கொடியை உயர்த்த வசதி செய்து இலங்கை சமசமாஜக் கட்சியின் கையைப் பிடித்து பிரதமர் ஆசனத்தில் அமர அவர்கள் அந்தரப் படுவதும் எமக்குத் தெரியும். பொது ஜனங்களின் நல் வாழ்க்கை எப்படிப் பாழாய் போனாலும் இவர்களுக்குத் தேவை அதிகாரமும் பதவியும். நல்லது அது எவ்வளவு தூரம் சாவரும் என்று நாமுந்தான் பார்ப்போம்.

#### உடன் படிக்கை மீண்டும் கொடுத்தால்......!

எந்தக் கட்சி நாட்டை ஆண்டாலும் சிங்கள சமுதாயத்தையும் லங்காபுரியையும் பத்திரப்படுத்த வேண்டுமென்னும் புத்த மகா சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி பண்டாரநாயகாவால் கிழித்தெறியப்பட்ட பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன் படிக்கையை திரும்பவும் கவனத்திற்கெடுத்துக்கொள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முனைவது யாது காரணத்தாலோ என்று மக்கள் ஆலோசிக்க வேண்டுமென்று பொல்லாகலை மாவனெல்லத்தையில் சிங்கள புதுவருட கொண்டாட்டத்தில் அக்கிராசனர் பதவி வகித்த கல்வி மந்திரி திரு பர்னாட் அலுவிகாரை எடுத்துரைத்தார்.

எதுவிதமாகவோ பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கை நடைமுறைக்கு கொண்டு வரப் பெறின் இந்நாட்டுச் சிங்கள மக்களுக்கு நேரிடப் போகும் நாசத்தை எண்ணிப் பார்க்க வேண்டுமென்றும் அவர் விளம்பினார்.

அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிராது, சிங்களர் எல்லோரும் ஒன்று பட்டு செல்வநாயகங்களின் நாட்டை இரண்டுபட உடைக்கும் வேலைகளுக்கு விரோதமாக முயற்சிக்க வேண்டுமென்று கோரிய அலுவிகாரை அவர்கள் மேலும் ஆயுள் உள்ளளவும் செல்வநாயகங்களின் எண்ணங்களுக்கு இடமளியாது எதிர்க்க வேண்டுமென்றும் கூறினார்.

'தியானி'

22-4-60

## அடிமைப்பட்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மே முதல் தேதியில் இப் போராட்டத்தைத் தொடங்கி வெற்றி கண்டதால் அந்நாளை இன்று மே தின விழா என்னும் பெயருடன் உலகமெங்கு முள்ள தொழிலாளர்கள் கொண்டாடுகின்றனர்.

விழாக் கொண்டாடுவதில் மட்டும் தொழிலாளியின் பெருமை உயர்ந்து விடப் போவதில்லை. அவனுடைய நலனைக் கவனிப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். இந்த விழாக் கொண்டாடுவதின் நோக்கம் நாலு அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. ஒரு தொழிலாளியின் வேலைப் பளுவைக் குறைப்பது.

2. உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கச் செய்வது.

3. தொழிலாளர்களைக் கேவலமாக நடத்தும் பூர்ஷுவ சாதிகாரப் போக்கை ஒழிப்பது.

4. பாட்டாளி மக்களின் வாழ்வை வளப்படுத்துவது.

இந்த நாலு அம்சங்களும் தான் ஒரு தொழிலாளிக்கு முக்கியமானவைகள். இவை நான்கையும் தனித்து நின்று பெறுவது மிகவும் கடினமானது. ஒற்றுமை மூலமே இவற்றைப் பெற வேண்டும். ஆதலால் தொழிலாளர்களிடையே தொழிற்சங்கங்கள் தோன்ற வேண்டும். ஒற்றுமையால் முடியாதது எதுவுமில்லை.





இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்
4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கிறது.
சோல் ஏஜண்டுகள்:—
சிர்ருல் கதீர் அன் கம்பெனி,
43, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு-11.
டெலிபோன்: 6009 & 3710.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டமும் சமூகமும்



# ஏமாற்றப் பொய்க் கூற்று

## (DECEIT OR FRAUDULENT MISREPRESENTATION)

ஏமாற்றப் பொய்க்கூற்று விடயத்தில் எங்கள் பொதுச் சட்டமாகிய ரோமன் டச் சட்டம் பெரும்பான்மையாக ஆங்கிலச் சட்டத்தையே தழுவி நிற்கின்றது. ஆங்காங்கு வித்தியாசம் ஏற்படும் பொழுது அதைக் குறிப்போம். ஆங்கிலச் சட்டத்தின்படி இன்னெருவர் ஒரு கூற்றை நம்பி செயலாற்றும் கருத்துடன் ஏமாற்றும் எண்ணத்துடன் ஒரு பொய்க்கூற்றைச் சொல்லுவதே ஏமாற்றப் பொய்க் கூற்ருகும். அவர் அதை நம்பிச் செயலாற்றி அதனுல் நட்டமடைந்தால்தான் இக் குற்றம் நட்டஈட்டுக் குற்றமாகும்.

### நடைபாவனையால் பொய்க்கூற்று

ஒரு பொய்க்கூற்றை ஒருவர் நேரடியாகவும் சொல்லலாம் அல்லது மறைமுகமாகவும் சொல்லலாம்; அதை அவர் செயலாலும் காட்டலாம் அல்லது நடைபாவனையாலும் (Conduct) காட்டலாம். உதாரணமாக ஒருவர் விற்பவரிடம் "நான் இது தங்கப் பவுணுலான நகையென மதிக்கிறேன்" என, விற்பவர் அது தங்கப்பவுணுலானதல்லவென அறிந்தும் வாய் பேசாமலிருந்து விலைக்குக் கொடுத்தால் விற்பவர் நடைபாவனையால் பொய்க் கூற்றுச் சொன்னதாகக் கொள்ளப்படும். அது போலவே கோணல்மாணலான கூற்றுக்கள் உண்மைமாயிருந்தபோதிலும் அவற்றை விளங்குபவர் அவற்றைப்பிழையாக விளங்கும்படி கூறினுல் அவையும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

### ஏமாற்ற பொய்க்கூற்றும் கபடமற்றபொய்க்கூற்றும்

ஆனுல் ஏமாற்றப் பொய்க் கூற்றுக்கும் கபடமற்ற (Innocent) பொய்க்கூற்றுக்கும் வித்தியாசமுள்ளது. அதைப் பின்வரும் உதாரணத்தால் விளங்கிக்கொள்ளலாம். ஒரு போக்குவரத்து வண்டி (Tramway) கம்பனியின் அதிகாரிகள் தங்கள் முன்விளம்பர வெளியீடொன்றில் (Prospectus) தங்கள் கம்பனிக்கு பாராளுமன்றத்தால் குதிரைகளுக்குப் பதிலாக நீராவியாலிழுக்கப்படும் வண்டிகள் பாவிக்கும் உரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதென அறிவித்திருந்தார்கள். (அக்காலத்தில் டிராம் வண்டிகள் குதிரைகளினுல் இழுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது)

இக்கூற்றை நம்பிச் சிலர் அக்கம்பனியில் முதலீடு செய்து அங்கத்தவர்களானுர்கள். அ கூற்றைக் கூறும் சமயத்தில் நீராவி வண்டிகள் பாவிக்குமுரித்து கம்பனிக்கு அளிக்கப்படுமென கம்பனி அதிகாரிகள் திடமாக நம்பக்கூடிய சந்தர்ப்பமிருந்தது; எனினும் இறுதியில் அவ்வுரித்தையளிக்கும் வியாபாரக் குழு (Board of Trade) அதைக் கொடுக்க மறுத்தது. அதனுல் கம்பனியின் செழிப்புக் குறைவதாயிற்று. இதையிட்டு, முதலீடு செய்த அங்கத்தவர்கள் கம்பனி அதிகாரிகள்மீது ஏமாற்றப் பொய்க் கூற்றுக் காட்டி நட்டஈட்டு வழக்கு வைத்தனர்.

### வழக்கில் தீர்ப்பு

ஆங்கிலேய உயர் நீதிமன்றமாகிய பிரபுக்கள் மன்றம் (House of Lords) தீர்ப்பளிக்கையில் அவர்களின் கூற்று கபடமற்ற பொய்க்கூற்று அன்றி அது ஏமாற்றப் பொய்க்கூற்றல்லவெனத் தீர்ப்புக் கூறியது. அதிகாரிகள் உண்மையாகவே தங்களுக்கு அவ்வுரித்துக் கிடைக்குமென நம்பியே அக்கூற்றைச்சொன்னுர்களென்னும் நியாயம்பற்றியே அத்தீர்ப்பையளித்தனர்; அவர்களின் நெஞ்சத்தில் கபடம் யாதுமில்லையெனவும் கொண்டனர்.

மேற்கூறிய நட்டஈட்டுக் குற்றத்தின் ஐந்து அம்சங்கள் பின்வருவன:-

### நிரூபிக்க வேண்டும்

(1) இக்கூற்றினுல் அதை நம்பிச் செயலாற்றிய காரணத்தால் வழக்கு வைப்பவர் நட்டமடைந்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். இது ஒரு முக்கிய அம்சம்.

### மனப்பான்மை முக்கியம்

(2) இப்பொய்க்கூற்று ஒரு நடந்த அல்லது நடைமுறையிலுள்ள விடயத்தைப்பற்றி இருக்க வேண்டும். ஆகையால் வருங்காலத்திலேற்படும் விடயத்தைப்பற்றி அபிப்பிராயம் கூறியிருந்தால் அது பொய்க்கூற்ருகாது; அபிப்பிராயத் தவருகும். அதைவிட ஒரு கூற்று பொய்க்கூற்ரே இல்லையோ வென்பதற்கு அளவையாதெனில் அதைக் கூறுபவரின் மனப்பான்மையே.

பேய்கூட ஒருவனின் மனநிலையை உணராது (Devil himself does not know the mind of man) என்னும் வாக்கியம் ஒருபுறமிருக்க ஒருவனின் மனநிலை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் (Man's mind is as much a fact as his state of digestion) எனும் கூற்றும் உளது. அதாவது வெளியிலே தோற்ருவிடினும் வைத்தியர்கள் ஒருவனின் ஜீரணிப்பு நிலையை (Digestion) எப்படி அச்சுட்டாகச் சொல்லுவார்களோ அதுபோலவே ஒருவனுடைய மனநிலையும் அளவெடுக்கக்கூடிய ஒரு செயல் (Fact).

### விதிவிலக்கு

உதாரணமாக ஒருவர் மனத்திலே ஒரு திட்டம் போட்டுக்கொண்டுவேருெரு கூற்றைச் சொன்னுல் அத் திட்டத்தை நிரூபிக்கக்கூடுமானுல் அது பொய்க்கூற்ருகும்; பின் உதாரணத்தால் அதை விளங்கலாம்; கம்பனி அதிகாரிகள் தங்கள் கம்பனியின் கடனைத் தீர்க்கும் திட்டத்துடன் கம்பனியைப் பெருப்பிப்பதற்குப் பணம் தேவையெனக் கூறிக் கடன் பத்திரங்கள் (Debentures) விநியோகித்தனர். இது ஒரு ஏமாற்றப் பொய்க்கூற்றெனத் தீர்க்கப்பட்டது.

அதுபோலவே அபாயகரமான வஸ்துக்கள் விற்பவர்கள் அதன் அபாயகரத்தைச் சுட்டிக்காட்ட வேண்டுமெனும் கடமையுண்டு. அந்நிலையில் விற்பவர் அபாயகரத்தை அறிந்தும் வாங்குபவருக்கு அறிவியாமல் மௌனமாயிருத்தலும் ஏமாற்றப் பொய்க் கூற்ருகும். இது வாங்குபவர் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்னும் கூற்றுக்கு விதிவிலக்கு என்பதைக் குறிப்பிட வேண்டும்.

### சில உதாரணங்கள்

இன்னும் சில உதாரணங்களை இவ்வம்சத்தில் கவனிக்க வேண்டும்.

(அ) ஒருவர் அரையுண்மையைச் சொல்லி மற்றதை மறைப்பதினுலே எதிர்மாருன கருத்தைக் கொண்டுவரும் கூற்றிற் பார்க்க மோசமான ஏமாற்றக் குற்றம் வேறில்லை.

(ஆ) அதுபோலவே கூறிய பொழுது உண்மையாயிருந்தபோதிலும் கூறிய பின்னர் சந்தர்ப்பவாயிலாய் அக்கூற்றுப் பொய்க்கூற்ருகியதை உணர்ந்தும் அக்கூற்றைத் திருத்தச் சமயமிருந்தும் அப்படிச் செய்யாமல் மௌனமாயிருந்து மற்றவரை நட்டத்தில் விட்டவரும் இக்குற்றத்துக்காளாவார்.

(இ) சட்டபூர்வமாக ஒன்றை வெளியிட வேண்டிய கடமையுள்ளவர் அதை வெளியிடாமல் மௌனமாயிருத்தலும் இக்குற்றத்தைக் கொண்டுவரும்.

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை

M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law

இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்

வருமானவரி பரிசீலனைக்குழு சட்ட ஆலோசகர்

### அறிந்து கூறப்பட்டிருக்க வேண்டும்

(3) மூன்ரும் அம்சம்: கூற்ருனது பொய்யென்று அறிந்து கூறப்பட்டிருக்க வேண்டும்; அல்லது கூற்றின் உண்மையில் நம்பிக்கை இல்லாமல் கூறப்பட்டிருக்கவேண்டும். அல்லது அது உண்மையாயிருந்தாலென்ன பொய்யாயிருந்தாலென்ன வந்தது வரட்டுமென்னும் அசட்டைத்தனத்தால் (Recklessness) கூறப்பட்டிருக்க வேண்டும். இங்கு பாவிக்கப்பட்ட சொல் அசட்டைத்தனமே ஒழிய கவனயீனம் (Carelessness) அல்ல என்பதை மிக உறுதியாகக் கவனிக்க வேண்டும்.

### கவனயீனத்தால் வரும் பொய்க்கூற்று

கவனயீனத்தினுலே ஒரு கூற்றுப் பொய்க் கூற்ருய் முடிந்தால் என்ன கதியென்பது ஒரு பெரிய பிரச்னையை எழுப்பும். ஆங்கிலச் சட்டப்படி ஒருவர் கவனயீனமாக (அசட்டைத்தனமாகவல்ல) ஒரு பொய்க்கூற்றைச் சொன்னுல் அதனுல் விளையும் நட்டத்துக்கு அவர் பொறுப்புள்ளவரல்லர். ஏனெனில் கவனயீனமுள்ளவன் ஏமாற்றும் மனப்பான்மையுடையவனல்லன். ஆனுல் தற்கால கவனயீனச் சட்டப் (Law of negligence) படி நீதிமன்றம் சிலவேளை மற்றக் கவனயீனமான குற்றங்களுக்கு நட்டஈடு அளிக்கும்மாதிரி இச்செயலால் வரும் நட்டத்துக்கும் ஒத்தாசை செய்யலாம்—ஆனுல் பொய்க்கூற்றுக் குற்றம்மூலமல்ல—அமெரிக்க சட்டவல்லுநர்கள் தற்சமயம் அப்படிப்பட்ட நட்டத்துக்கு கவனயீனச் சட்டத்தின்கீழ் ஒத்தாசை கொடுக்கிருர்கள்.

### அமெரிக்க நடைமுறை

ஒரு அபாயகரமான பொருளை வைத்திருப்பவன் கவனயீனத்தால் நட்டம் விளைந்தால் அதற்கு நட்டஈடு கொடுக்க வேண்டியதுதானென்று எல்லாச் சமுதாயச் சட்டமும் ஏற்றுக்கொள்கிறது. அமெரிக்கர் சொல்வது யாதெனில் ஒருவர் ஒரு எழுதுகோலால் இன்னெருவரைக் கவனயீனமாகக் கீறினுல் அதற்கு நட்டஈடு கொடுக்க வேண்டும்; ஆனுல் அவ்வெழுதுகோலால் கவனயீனமாக கடலிலுள்ள கற்பாறையை ஒரு படம் வரையும் காரியஸ்தர் போடாமல் விட்டதன் நிமித்தம் கப்பல் மோதி கோடிக்கணக்கான பண நட்டம் ஏற்பட்டால் ஏன் நட்டத்துக்கு நிவர்த்தி செய்யத் தேவையில்லையென்பதே.

ரோமன் சட்டப்படியும் கவனயீனக்கூற்ருல் ஒருவருக்குத் தேக நட்டம் (Physical Injury) ஏற்பட்டால் அதற்கு நட்டஈடு கிடைக்குமென்பதே கொள்கை; ஆனுல் மற்றைய நட்டங்களுக்கு அப்படி நட்டஈடு கிடையாது.

### வழக்குத் தொடரல்

(4) நான்காம் அம்சம் யாதெனில் பொய்க்கூற்று எவருக்குக் கூறப்பட்டதோ அவரே நட்டம் விளைந்தால் வழக்குத் தொடரலாம். இல்லையேல் பொதுஜனங்கள் யாவரும் அறிந்து செயலாற்றுமுகமாக இன்னெருவருக்கு கூறியிருக்க வேண்டும்.

நட்டமடைந்தவர் இதை நம்பிச் செயலாற்றுவார் என்னும் நோக்கத்துடன் இக்கூற்றைக் கூறியிருக்க வேண்டும். கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்றமாதிரி ஒருவருக்கென்று கூறப்பட்டதை நம்பி இன்னெருவர் நட்டப்பட்டால் அவரே அதற்குப் பாத்திரவாளியாவர். மற்றப்படி அதைக் கூறியவர் பாத்திரவாளியல்லர்.

உதாரணமாக ஒரு எண்ணெய்க் கம்பனி அதிகாரிகள் கம்பனியின் நலத்தைக் காப்பாற்றுவதற்காக சில தரகர்களுக்கு தங்கள் கம்பனி இன்னும் எண்ணெய்க் கிணறுகள் (Oil Wells) கண்டுபிடிக்கவில்லையென்று பொய்யாகக் கூறினுர்கள்—அதையறிந்த சில கம்பனிப் பங்கு எடுத்தவர்கள் (Shareholders) தங்கள் பங்குகளை குறைந்த விலைக்கு விற்று அநாவசியமான நட்டமடைந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் அவர்களை விற்குமுகமாக கூருதபடியாலும் அவர்களுக்கு நேரே கூருதபடியாலும் இக்குற்றம் ஏற்படவில்லையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### ஸ்தாபிக்க வேண்டும்

(5) ஐந்தாம் அம்சம் யாதெனில் நட்டமடைந்தவர் கூற்றை நம்பிச் செயலாற்றியபடியால்தான் நட்டமடைந்தாரெனப் பூரணமாக தாபிக்க வேண்டும். உதாரணமாக நட்டமடைந்தவர் உண்மையை உணர்ந்துகொண்டும் செயலாற்றிவிட்டு பொய்க்கூற்றினுல்தான் தாம் நட்டமடைந்ததாக நட்டஈடு கோர முடியாது; மேலும் உண்மை வெட்டவெளிச்சமாகத் தெரியும் பொழுதும் அல்லது தன் கருமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தால் உண்மையை அறியக்கூடிய சந்தர்ப்பமிருந்தும் அதை நழுவவிட்டுக் கூறியவரின் பொய்க்கூற்றை நம்பி நடந்தேன் என்று கூறவும் முடியாது. உதாரணமாக ஒருவர் ஒன்றைத் துலாம்பரமாகப் பித்தளை நகையென அறியக்கிடைக்கையில் விற்பவர் தங்கமெனக் கூறினுரென்று அவரிடம் நட்டம் கோர முடியாது. இவ்வமயத்தில்தான் "வாங்குபவர் எச்சரிக்கவும்" என்னும் வாக்கு நிலவும்.

மேற்கூறியவைகளே ஏமாற்றப் பொய்க்கூற்ருல் விளையும் நட்டஈட்டுக் குற்றத்தின் அம்சங்கள்.

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!


இன்றே நாஷனல் பாட்டரிகளைப்

பாவிக்க ஆரம்பித்து

அதிக லாபம் பெற்று

ஆனந்தியுங்கள்.





நீடியகாலம் பாவிக்கிறது

விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி. போன்: 525

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாசற்ற அழகைப்படைத்து அதற்கு நிலையான வடிவம் கொடுப்பது ஓவியம்

## மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் அழகிய பூங்காவை ஓவியத்துக்கு ஒப்பிட்டார்

## அகநானூற்றில் பெண் ஓவியம் போல நின்றாள் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது

நாகரிகம் வளராத மிகப் பழங்காலத்தில் மனிதன் தன் எதிரே இல்லாதவர்களுக்குத் தன் கருத்தைப் புலப்படுத்த விரும்பியபோது மிக மிகத் திகைத்தான்; தடுமாறினான். பிறகு சில கருவிகள் அவனுக்கு உதவியாக வந்தன. அவ்வாறு உதவியாக வந்தவைகளுள், ஒன்று ஓவியம். அக்காலத்தில் அது பண்பட்ட கலையாக வளர்ந்திருக்கவில்லை. கிறுக்கலாகவே இருந்தது. ஆறு மீன்கள் என்ற கருத்தைப் புலப்படுத்த விரும்பிய பழங்கால மனிதன், மீன் போல் ஆறு உருவங்களை எழுதினான். கதிரவனைப் பற்றி உணர்த்த விரும்பியவன் வட்ட வடிவமாக ஏதோ ஓர் உருவம் எழுதினான். அவைகளை எல்லாம் ஓவிய எழுத்துக்கள் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுவர்.

### கலைப் படைப்புக்கு தாவிய நிலை

பிறகு எழுத்துக்களைத் தனியே எழுதக் கற்ற நிலை வந்தபின்னும், உருவங்களை அரைகுறையாக எழுதும் வழக்கம் மனிதரை விடவில்லை. அந்த அரைகுறையான உருவங்களையே பொறுமையோடு செம்மையாக எழுதிப் பார்க்கத் தொடங்கினார்கள். அவ்வாறு எழுதிய உருவங்கள் சில அழகாக அமைந்தன; உண்மையான பொருள்களை விட, அந்த உருவங்கள் அழகாக இருப்பதாக உணர்ந்தனர்; மகிழ்ந்தனர்; கூத்தாடினர். இயற்கைப் படைப்பிலிருந்து கலைப் படைப்பிற்கு மனித உள்ளம் தாவிய நிலை இது.

### அழகு

அழகு நிலையில்லாதது. தோன்றியபின் மாறுவது; நிலையில்லாமல் மாறி மாறி மறைவது. மனித உள்ளம் அந்த அழகுக்கு நிலையான வடிவம் கொடுக்க விரும்பியது. அதற்கு ஓவியக்கலை பயன் பட்டது.

உலகத்தில் படைக்கப்பட்டவற்றுள் அழகான பொருள்களுக்குச் சில குறைகளும் சேர்ந்து அமைந்துள்ளன. அந்தக் குறைகள் இல்லாமல் அழகு அமைந்திருக்கக் கூடாதா என்று மனித உள்ளம் ஏங்கியது. அந்தக் குறைகள் இல்லாமல் படைக்க விரும்பியது. வாழ்க்கையில் குறையுள்ள பொருள்கள் இருந்த போதிலும், கலையில் குறையற்று அழகைப் படைக்க விரும்பியது. அதற்கு ஓவியக் கலை உதவியது.

### ஓவியக் கலை அளித்த பயன்

உலகப் படைப்பில், அழகான பொருள்களோடு அழகற்ற பொருள்களும் கலந்துள்ளன. அழகும் அழகின்மையும் கலந்துள்ள இந்தப் படைப்பு, மணிகளும் கற்களும் கலந்த கலப்புப் போல் தோன்றியது. ஒளியில்லாத கற்களை விட்டு, ஒளியுள்ள மணிகளை மட்டும் எடுத்து மாலை தொடுப்பதுபோல், அழகுள்ள பொருள்களை மட்டும் தொகுத்துக் கண்டுமகிழ விரும்பியது மனித உள்ளம். முறையில்லாமல் கலந்துள்ள படைப்பைவிட, முறையுடன் அமைந்த படைப்பு அழகாக இருத்தலை உணர்ந்தது. அத்தகைய படைப்பில் முனைந்தது. அதற்கு ஓவியக்கலை பயன்பட்டது.

டாக்டர்
மு. வரதராசனார்

### தமிழர் ஓவியம்

தமிழர் பலதிறக் கலைச் செல்வங்களைப் போற்றிப் பெருமை கொண்டவர்கள். ஓவியக் கலையையும் செல்வமாக வளர்த்த பெருமை அவர்களுக்கு உண்டு. தமிழரின் ஓவியங்கள் துணிகளில் விளங்கின; மரப் பலகைகளில் விளங்கின; சுவர்களிலும் விளங்கின. வீட்டுப் பாத்திரங்கள் முதல் சுவர்கள் வரையில் எல்லாவற்றிலும் ஓவியங்களை வரைந்து அழகை நுகர்ந்த மக்கள் தமிழர். சுவரை வைத்துத் தான் சித்திரம் எழுத வேண்டும் என்ற பழமொழி பிறந்த நாடு இது.

### சீத்தலைச் சாத்தனார் வர்ணனை

மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் அழகில் சிறந்த ஒரு பூந்தோட்டத்தை வருணிக்க முனைந்தார். காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய சிறந்த பூங்கா அது. அதை அழகில் சிறந்ததாகக் கூற விரும்பிய அவருடைய மனம், அந்தப் பூங்கா ஓர் ஓவியம் போல் தோன்றியது என்றார்.

வித்தகர் இயற்றிய
விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கை
யாம் போர்ந்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்

என்று அவர் கூறியதில், அழகிய பூங்காவுக்கு உவமை ஓவியமே என்றார். அந்தப் பூங்கா எத்தகைய பூங்கா— என்கிறார் புலவர். வண்ணப் பூக்களும், மரத்தை வருடிடும் கொடிகளும், பூத்துக் காய்த்துக் குலுங்கும் கனி மரங்களும் கொண்ட ஒரு நல்ல பூங்காவை அவர் எதனுடன் ஒப்பிடுகிறார்? ஓவியத்துடன் ஒப்பிடுகிறார். அந்த ஓவியம் எத்தகையது? சிறுவனின் கிறுக்கல் ஓவியமா? முதிராத கலைஞன் ஓவியமா? இல்லை! அந்த ஓவியம் வித்தகர் இயற்றியது என்கிறார்! ஓவியக் கலையின் இரு கரைகளையும் கண்ட வித்தகர் இயற்றியது. புகழ் கொண்ட அந்த ஓவியத்தைப் போன்றதுதான் அந்தப் பூங்கா என்கிறார் சீத்தலைச்சாத்தனார்.

### ஓவியத்துக்கு ஒப்புவமை கூறும் பண்பு

வேறு புலவர்களும், அழகு மிக்க அரண்மனைகளையும் செல்வர்களின் பெரிய வீடுகளையும் சிறப்பித்துக் கூறுமிடங்களில், ஓவியம் கண்டாற்போல் தோன்றும் உயர்ந்த இல்லங்கள் என்று போற்றிப் புகழ்ந்தனர். கவலையாலோ சிந்தனையாலோ செயலற்றுப் பேச்சற்று நிற்கும் பெண்களைப் பற்றிக் கூறுமிடத்தும் ஓவியம்போல் நின்றாள் எனக் கூறும் மரபு இருந்துவருகிறது.

மனையகம் புகுந்து
மணிமேகலைதான்
புனையா ஓவியம் போல
நிற்றலும்

என்று கூறப்படுதல் காணலாம். பெண்கள் ஓவியம் போல் நின்றனர்; உயிர்த்தனர்—என்றும் அந்த மரபை ஒட்டியே பேசாது நின்ற பாவையாம் மணிமேகலையையும் உவமை கூறி ஏத்தினார். அழகான சொற்களில் பேசாத பாவையை, 'புனையா ஓவியம்'—என்று குறிப்பிடுகிறார். எழுதாத ஓவியம் போன்று நின்றாள் என்ற அவர் கூற்றில் எத்துணை நயம்! அவ்வாறு நிற்கும் பெண்ணின் உள்ளக் குறிப்பை உணர்த்துமிடத்தும்

ஓவச் செய்தியின்
ஒன்றுநினைந் தொற்றி

என்று அகநானூற்றில் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

இவ்வாறு இலக்கியக் கலைஞர்கள் போற்றுமளவிற்குச் சிறந்து விளங்கியது ஓவியக் கலை. சிறந்த பாட்டையும் உயர்ந்த வருணனையையும் சொல்லோவியம் என்று கூறும் வழக்கம் இந்த இரு வகைக் கலைகளுக்கும் உள்ள இயல்பைப் புலப்படுத்துவதாகும். பாட்டு, சொல்லால் அமையும் கவின் கலை; ஆதலால் செவியால் நுகரத் தக்கது. ஓவியம் கோட்டாலும் வண்ணத்தாலும் அமையும் கவின்கலை; ஆதலால் அது கண்ணால் நுகரத் தக்கது. இதுவே வேறுபாடு!

—ஓவியர் சங்க ஆண்டு விழா மலர்.

# மொழிப்பற்று இல்லாத அடிமைக் கூட்டம் தமிழுக்கு செய்யும் தீங்கு

## எழுத்தாளர் அன்றும்—இன்றும்

எழுத்தாளர் என்ற பெயர், எழுத்தை ஆள்பவர் என்ற பொருளைத் தரும் மிகப் பழையதொரு தமிழ்ச் சொல்லாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றி இடைக்காலத்தும் நிலவியிருந்த இச்சொல் மறைந்து போயிற்று. சேந்தேபூதனார் என்ற சங்கச் சான்றோர் ஒருவர் குறுந்தொகையிற் காணப்படும் சான்றோர் நிரலில் உள்ளார். அவர் அந்நாளில் மதுரையில் வாழ்ந்த எழுத்தாளராவர். அதுபற்றி அவரை மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் என்றனர். சங்க காலத்துக்குப்பின் வந்த பல்லவ பாண்டிய சோழர் காலத்தும் எழுத்தாளன் எழும் போதழகியான், எழுத்தாளன் செம்பியதரையன் எனப் பலர் இருந்தமை கல்வெட்டுகளால் தெரிகிறது.

### பழங்கால எழுத்தாளர்

இந்த எழுத்தாளர் பெரும்பாலும் ஏடு எழுதுவோரும் நீதிமன்றங்களின் துணிபுகளை எழுதுவோரும், மக்களிடையே தோன்றும் அறவழக்குக்குரிய விண்ணப்பம், உடன்படிக்கை, நில விற்பனை முதலியவற்றை வக்கணை குன்றாமல் எழுதுவோரும் மறவழக்குகட்குரிய செயல் முடிவுகளை எழுதுவோருமாக இருந்துள்ளனர். பிற்காலத்தே, இவ்வெழுத்தாளர் பெயர், வடமொழி வியாகரணிகட் கொப்ப எழுத்திலக்கணம் அறிந்த மக்கட்குச் சிறப்புப் பெயராகவும் நிலவ முயன்றது.

"எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும், எழுத்தறிவார் காணின் இலையாம்" என்பதனால், எழுத்து இலக்கணத்தையும் அதனை ஆளுதல் இலக்கணம் கற்று விளங்குதலையும் குறிப்பது காணலாம்.

ஔவை
சு. துரைசாமி

சென்ற இருநூறு ஆண்டுகளில் இச் சொல் மறைந்து போயிற்று. ஆங்கிலமே அரசியல் மொழியாக இருந்தபடியால், அதனைப் பிழையற எழுதுவதும் பேசுவதுமே கல்வி நிலையங்களில் குறிக்கொண்டு பேணப் பட்டன. ஏனைத் தமிழ் மொழியைப் பிழைபட எழுதினாலும், பேசினாலும் குற்றமாகக் கருதாத புறக்கணிப்பு நிலை உண்டாயிற்று. இதற்கிடையே வடமொழியின் துணையின்றியே, தனித்து நிற்கவும் சிறப்பாக எழுதவும் மேன்மேலும் வளர்ச்சிபெருகவும் தமிழ் மொழி பழமையும் வளமையும் உடையதாக இருப்பது கண்ட வடமொழியடிமைகள், அதன் தனிச் சிறப்பைச் சிதைத்து ஏனை ஆந்திரம், கன்னடம், மலையாளம் போல வடமொழியின் துணையின்றி ஒரு நாளும் வாழ மாட்டாத சவலை மொழியாக்கப் பலவகையாக முயன்றும் வெற்றி காணாமையால் இந்தப் புறக்கணிப்பு நிலையைப் பயன்கொள்ள எண்ணினர்.

### வடமொழிக் கலப்பு

ஏனை ஆந்திரர் மலையாளர் முதலியோர் துணைகொண்டு வடமொழியை அதற்குரிய ஒலி குன்றாமல் தமிழில் நுழைத்துப் பார்த்தனர். "வடசொற்கிளவி வட எழுத்து ஒரீஇ (நீக்கி) எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" என்ற தொல்காப்பியத்தைச் செல்லாக் காசாகக் கருதினர். கலைச் சொற்களை ஆக்கும் முயற்சியில் நுழைந்து அவற்றை வடமொழியில் ஆக்கித் தமிழில் பரப்ப முயன்றனர். எப்படியோ காலப் போக்கில் தமிழர் விழித்துக் கொள்வராயினர். தமிழின் தனிமையும் தலைமையும் இனிமையும் கெடாத வகையில் வேற்றுமொழிக் கருத்துக்களையும் சொற்களையும் தமிழர் தமது தமிழ் மொழியில் சேர்த்து வளர்க்க முன்வந்தனர். தமிழின் இயல்பான ஓசைக்கேற்ற வகையில் வடமொழி முதலிய பிறமொழிக் கருத்துக்களையும் சொற்களையும் வரவேற்றுத் தமிழை வளர்க்கும் முறையை நன்கு தெரிந்தவராதலால், அம்முறையில் தமிழ்ச் சொற்களை ஆக்கவும் தொடங்கி விட்டனர்.

### அடிமைக் கூட்டத்தின் தீச்செயல்

பிற தாயரின் வண்ணமும் யாவரையும் சேரும் செய்கையும் கண்டு அவளைப் [illegible]

(10-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்த
உஷா தையல் மெஷின்களே




சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 மே மாதம் 1-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

தொலை பேசி எண்: 3411. த. பெ. 1183


# தமிழ் பேசும் இனம் தலைநிமிர்ந்தது

சுதந்திரன் ஏற்கனவே சொல்லி வந்தபடி, அரசியல் அறிந்தவர்கள் அநுமானித்தபடி, அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்தபடி டட்லி அரசாங்கம் கவிழ்ந்துவிட்டது! யு. என். பி. ஆட்சி வீழ்ந்துவிட்டது!

இந்த வீழ்ச்சியில் தமிழ் பேசும் மக்கள் பெருமைகொள்வதற்குத் தக்க காரணம் உண்டு. என்றும் இல்லாதவாறு ஒரு பலத்த ஒற்றுமையைத் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் கடைப்பிடித்தார்கள். இந்த ஒற்றுமைதான் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பயன்பட்டது. தமிழ் பேசும் இனத்தின் திரண்ட சக்தியை ஆட்சியாளருக்கும், அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டப்பயன்பட்டது. அதன்மூலம் பலமற்றவர்கள் என்று கருதப்பட்ட தமிழ் பேசும் இன மக்கள் உறுதியும், நம்பிக்கையும், பலமும் பெற்றவர்களாக, தருக்கோடு தலைநிமிர்ந்து நிற்கப் பயன்பட்டது:

தமிழ்ப் பிரதிநிதிகள் மட்டும் தங்கள் பூரண ஆதரவை யு. என். பி.க்கு ஒருமுகமாக அளித்திருந்தால் டட்லி அரசாங்கம் இவ்வளவு வெட்கக்கேடான முறையில் வீழ்ச்சியடைந்திருக்க வேண்டியதில்லை. வெற்றிகரமாக ஆட்சியை நடத்தியிருக்கலாம்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 19 அபேட்சகர்களை நிறுத்தியபோது, 151 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் 19 பேர் போய் என்னத்தை வெட்டி விழுத்தப்போகிறார்கள் என்று அறியாமையினால் கேட்டார்கள் சிலர். அறிந்தும், வேண்டும் என்று நகுதல் செய்தார்கள் இடதுசாரிகளான சமசமாஜிஸ்டுகளும், கொம்யுனிஸ்டுகளும். இன்று உணர்ந்துகொண்டார்கள் உண்மையை!

19 பேர் அல்லர், 15 பேர் ஒரு கட்சியில் ஒன்றாக நின்றாலே போதும், ஆட்சியைக்கூட அடியோடு வெட்டி விழுத்திவிடலாம் என்பதை யு. என். பி.யின் வீழ்ச்சி துலாம்பரமாகக் காட்டிவிட்டது.

தமிழ்ப் பிரதிநிதிகளில் 15 பேர் ஒன்றாக நின்றாலே, ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முடியுமானால், எல்லாத் தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒரே கட்சியில், ஒரே கொடியின்கீழ், ஒரே இலட்சியத்தோடு, ஒன்றிரண்டு ஒருமுகப்பட்டு நின்றால் அவர்களால் சாதிக்க முடியாத காரியம் ஒன்றுமே இருக்க முடியாது.

ஜனநாயக அரசமைப்பு நிலவும் உலகத்தின் எந்தப் பாகத்திலும் ஒரு சிம்மாசனப் பிரசங்கம் தோற்கடிக்கப்பட்டதாகச் சரித்திரமே கிடையாது. இந்த மானக்கேடான காரியம் 'ஸ்திரமான அரசாங்கத்தை நாங்கள் தான் அமைப்போம், நாட்டின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் எங்களால்தான் நிலைநாட்ட முடியும்' என்று கொக்கரித்துக்கொண்டு வந்த யு. என். பி. ஆட்சியிலேயே, டட்லியின் தலைமையிலேயே, ஒரு மாதத்துக்குள் நடைபெற்றுவிட்டது.

இது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்திய கவர்னர் ஜெனரலுக்கு அவமானம்! கவர்னர் ஜெனரலைத் தமது பிரதிநிதியாக நியமித்துக்கொண்ட பிரிட்டிஷ் இராணிக்கே அவமானமாகும்!

"சிம்மாசனப் பிரசங்கத்துக்கு ஆதரவு கிடைக்காவிட்டால் பாராளுமன்றத்தையே கலைத்துவிடும்படி சிபார்சு செய்வேன்" என்று பயமுறுத்தினார் பிரதமர் திரு டட்லி சேனநாயகா. இந்தப் பயமுறுத்தலுக்கு தமிழரசுக் கட்சியினர் மசிந்து கொடுக்க அறவே மறுத்துவிட்டார்கள்.

ஏப்ரல் 6ந் தேதி தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கொழும்பிலே ஒன்றுகூடி மேற்படி பயமுறுத்தல்பற்றி ஆராய்ந்தார்கள்.

"பாராளுமன்றம் கலைந்தாலும் சரி, அதன்பின் வரக்கூடிய பொதுத் தேர்தலில் நாம் ஒவ்வொருவரும் நமது பிரதிநிதிப் பதவிகளை இழந்தாலும் சரி, தமிழ் பேசும் மக்களின் ஆதார உரிமைகளை வழங்க மறுக்கும் எந்த அரசாங்கத்துக்கும் ஆதரவளிப்பதில்லை. தேர்தலின்போது நாம் தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து அணுவளவும் பிசகாமல், எந்தப் பதவியையும் ஏற்காமல், தமிழ் பேசும் மக்களுக்குத் தீமை பயக்கும் என்று கருதும் எந்த அரசாங்கத்தையும் எதிர்த்தே வாக்களிக்க வேண்டும்" என்று முடிவு செய்தார்கள்

இந்த முடிவை அவர்கள் இறுதிவரை உறுதியோடு நின்று நிறைவேற்றி வைத்தார்கள்.

தமிழரசார் காட்டிய தளராத நிலையையும் உறுதியையும் கண்டு இன்று அவர்களைப் பாராட்டாதவர்கள் இல்லை. படித்த சிங்கள மக்கள், தமிழரசுக் கட்சியின் தலைமையினால் தமிழ் மக்கள் இந்த நாட்டில் மீண்டும் தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய அந்தஸ்தைப் பெற்றுவிட்டார்கள் என்று வாய்விட்டுப் பாராட்டுகிறார்கள்.

தமிழரசுக் கட்சியைச் சார்ந்த தலைவர்களின் உறுதியையும் திறமையையும் கண்டு இடதுசாரிக் கட்சிகள் அவர்களின் நட்பை இன்று நாடுகிறார்கள். இத்தகைய ஒரு பெரிய மனமாற்றத்தைச் சிங்கள சமுதாயத்தின் பெரும்பாகத்திடையே ஏற்படுத்தும் அளவுக்குத் தமிழரசுக் கட்சியினர் நெறிமுறையாக நடந்துகொண்டது வரவேற்கத்தக்கதாகும். 1956ம் ஆண்டிலே தமிழரசுக் கட்சியென்றால் "பங்க வேவா" என்று கத்திய சிங்களப் பொதுமக்கள் அன்று யு. என். பி யைத் தோற்கடித்துவிட்டு தமிழரசுப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியபோது "பெடரல் பக்ஷயட்ட ஜயவேவா" என்று கோஷித்தார்கள். இந்த மனமாற்றம் எத்தகையது என்பதையும் தமிழ் பேசும் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவற்றையெல்லாம் மனதில்கொண்டு அடுத்துவரும் பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எதுவித போட்டியுமின்றித் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே எல்லாத் [illegible] ப்புவார்களேயானால் [illegible] மக்களின் ஒற்றுமையும் அந்தஸ்தும் நிச்சயம் மேலும் உயர்வடைவதாகும்;

# மிருகங்களுக்கு உள்ள பாதுகாப்பு கூட இல்லையே இங்கே தமிழ் பேசும் மக்களுக்கு!

# நாம் ஒரு தனித் தேசிய இனம்

## மொழி, நிலம், சரித்திரம் நமக்கு உண்டு

### பாராளுமன்றத்தில் டாக்டர் நாகநாதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்தப் பொறுப்பற்ற பிரதமரி, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி மகாதேசாதிபதிக்குப் புத்தி கூறும் விஷயத்தைத் தன் தலைமேல் தூக்கிப்போட்டுக் கொண்டார். பாராளுமன்ற நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறாக நடந்துகொண்ட இப்பிரதமருக்கு இவ்வாறு செய்யப் பாராளுமன்றத்தின் அங்கீகாரமோ; தத்துவமோ இல்லை. எனவே எமது பொது திருத்தப் பிரேரணை "அரசாங்கத்தில் நம்பிக்கையில்லை" என்று கூறும் பொழுது, ஆரம்பத்திலிருந்தே துளிகூட நம்பிக்கையில்லை என்பதுதான் கருத்து. ஆனபடியால், எந்தவித தத்துவமோ, வாரிசுஉரிமையோ அற்ற இப்பிரதமரில் மகாதேசாதிபதி நம்பிக்கை வைக்க முடியாது.

இனி எமது கட்சியின் திருத்தப் பிரேரணைக்கு வருகிறேன். இலங்கைத் தீவிலுள்ள இரு பெரிய சமுதாயங்கள் முகம் மாறுபட்டிருக்கும் நிலைமைபற்றி வருந்துவதாகவும், இனங்களுக்கிடையே இசைவு ஏற்படுத்துமுகமாகப் பேச்சுவார்த்தைகள் விரையில் ஆரம்பிக்கப்போவதாகவும் மிகவும் சரியாகவே மகாதேசாதிபதி தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறியிருந்தார். இப்பிரசங்கத்தைச்சிறிது அலசிப் பார்ப்போம். ஆமாம், ஆழமாகப் பார்ப்பதற்கு இப்பிரசங்கத்தில் தகுதி எதுவுமில்லை.

முதலாவதாக இப்பிரசங்கம் வரையறையாக எதையும் சொல்லுவதாக இல்லை. "பிடிபடாமல்" தப்ப முயலுகிறது இது. பிரசங்கத்தின் இக்குணம்பற்றி அரசாங்கக் கட்சியினர் பெருமையடைகின்றனர். மணமகன் ஒருவனைப் பார்த்து "இந்தப் பெண்ணை நீ ஏற்றுக்கொள்ளுகிறாயா?" என்று கேட்கும் பொழுது அவன் 'பிடிபடாமல்' பதில் கூறுவதுபற்றிப் பெருமைப்பட முடியுமா?

சிம்மாசனப் பிரசங்கத்தில் வரையறை இருக்க வேண்டும். குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு குறிப்பான பரிகாரம் என்ன என்பதை எடுத்துக் கூற வேண்டும். "பிடிபடாமல்" சாதுரியமாகப் பேசுவதுதான் சிம்மாசனப் பிரசங்கத்தின் நோக்கமானால், அப்பிரசங்கத்தில் எவ்வளவோ பொறுப்பற்ற வகையில் எதை எதையோவெல்லாம் கூறிவிடலாம். நான் முன்னர் கூறிய சீனப் பிரபுவின் சிதையில் போட்டெரிக்கப்படும் இள மங்கையர்களைப்போல, எல்லை கடந்த தாராளம் காட்டிவிடலாம்!

எங்கள் கட்சியின் முதலாவது திருத்தப் பிரேரணைக்கு வருகிறேன். எனது நண்பரும் தலைவருமான காங்கேசன்துறைப் பிரதிநிதி இதை பிரேரித்திருக்கிறார்.

"ஈழ மக்கள் வாழும்நாட்டுக்குகந்ததும், நீதி நியாயத்திற்குட்பட்டதும், வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களால் பிரமிக்கத்தக்க பெரும்பான்மையினால் ஆமோதிக்கப்பட்டதுமான மொழிவழித் தமிழ் இராச்சியம் அல்லது இராச்சியங்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கத் தவறிவிட்டது அரசாங்கம்" என்கிறது திருத்தப் பிரேரணை

சபாநாயகர் அவர்களே! மொழிவழி அல்லது இனவழி இருவின மக்கள் வாழும் நாடுகளில், அதிகாரத்தைப் பெறும் இனத்தவர்கள்மற்ற இனத்தவரை அழிக்க முயல்வது இயல்பானது. மனித சுபாவமே இதுவாகத்தானிருக்கிறது. உதாரணம் ஒன்றைக் கவனிப்போம்.

பிரிட்டிஷ்காரன்இலங்கை, இந்தியா, மலேயா ஆகிய நாடுகளுக்குவந்தான். இங்கு குடியேறி வசிக்க வரவில்லை. இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டுவதற்காக வந்தான். இப்பொருளாதாரச் சுரண்டலுக்காக, நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தது. இவ்வபிவிருத்தியால், மறைமுகமாக இந்நாடும் சிறிது இலாபமடைந்தது. வந்த பிரிட்டிஷ்காரன் தனது அலுவல் முடிந்ததும் வீட்டுக்கு—பிரிட்டனுக்கு—திரும்பிவிட்டான். அவனுடைய மனைவி மக்கள் அங்கே தான். ஆனால் குடியேறிய நாட்டில் நிரந்தரமாகக் குந்திக்கொண்ட பிரிட்டிஷ்காரரின் கதை அதுவல்ல. கைப்பற்றிய நாட்டில் நிலையிதியாகிவிட்ட பிரிட்டிஷ்காரன் அரசியல் ஆதிக்கம் வகித்தான். திட்டமிட்டு, ஈவிரக்கமற்றுத் தன் ஆதிக்கத்துக்கு கீழே வந்த மக்களை—இனங்களை—நிர்மூலமாக்கினான்; அழித்தொழித்தான்.

தென்னாபிரிக்காவில் நடப்பது என்ன? நிரந்தரமாக அங்கு இருக்கும் பிரிட்டிஷ்காரன் அரசியல் ஆதிக்கம் வகிக்கிறான். தொகையில் சிறுபான்மையாயிருந்தும், அரசியல் ஆதிக்கத்தைப் பொறுத்தவரை வெள்ளைக்காரன்தான் பெரும்பான்மையினன். அரசியல் சிறுபான்மை மக்களாகிய ஆபிரிக்க சுதேசிகள் படும் அவஸ்தைபற்றி நான் சொல்லத் தேவையில்லை. இம்மக்களின் சுதந்திரம், உரிமைகள், இம்மக்களின் அடிப்படை வாழ்வு, அத்தனையுமே திர்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சி அபேட்சகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட மீண்டும் தக்க பலத்தோடு விட்டு வைப்பது முறை. இதைப் பிரமுகர்கள் குழுக்கள் விஷயமறியாமல் போட்டிக்கு கிளம்பக்கூடிய அபேட்சகர்களுக்கு விளக்குவார்கள்.

### செலவும் சிரமமும் வீண்

இது தவிர தேர்தலில் போட்டியிடுவதால் ஏற்படும் பணச் செலவு, சக்தி விரயம், சிரமம் ஆகியன எல்லாம் எதற்கு என்றும் அவர்கள் அறிவுரை வழங்க இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் எல்லோரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்களேயானால் அது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கும் உறுதிக்கும் இலட்சியப் பற்றுக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும். அதைக் கண்டு சிங்கள அரசாங்கமே ஒடுங்கும். உரிமை வழங்க முந்தும் என்ற இந்த உண்மையையும் பிரமுகர்கள் குழுக்கள் தெளிவு படுத்தும்.

இப்படியான சூழ் நிலை தமிழ் பிரதேசத்தில் இருப்பதால் அங்குள்ள (அம்பாறை நீங்கலாக) 22 தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ்-சிங்கள ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### கமிஷனருக்கு கடிதம்

கொழும்பு மத்திய தொகுதிக்கு தமிழ் இடாப்புகளும் தேவை என்று வற்புறுத்தித் தமிழரசுக் கட்சியினர் தேர்தல் கமிஷனருக்கு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு மொழி பேசும் மக்கள் 20 வீதத்துக்கு அதிகமாக வாழும் தொகுதிகளில் எல்லாம் அந்த மொழியிலும் தேர்தல் இடாப்புக்கள் வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் இடாப்புக்கள் வெளியிடப்பட வேண்டும் என்றுதேர்தல் திருத்தச் சட்டம் கூறுகிறது.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணப் பகுதிகளில் சிங்களம் பேசும் மக்கள் 5 வீதம் கூட இல்லாமலிருந்தும் யாழ்ப்பாணம் கவர்ண்மெண்ட் ஏஜண்ட் திரு. ஸ்ரீகாந்தா கடந்த பொதுத் தேர்தலின்போது இரண்டு சிங்கள லிகிதர்மாரை விசேஷமாக அமர்த்தி, அவர்களுக்கு "ஓவர் டைம்" சம்பளம் கொடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள வாக்காளருக்குரிய சீட்டுப் பத்திரங்களைச் சிங்கள மொழியிலேயேவிலாசமிட்டு அனுப்பி வைத்தார் என்று தெரிகிறது.

ஆனால் சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ் வாக்காளர்களுக்கெல்லாம் இச் சீட்டுக்கள் சிங்கள மொழியிலேயே விலாசமிடப்பட்டனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெடரல் பக்ஷய பங்கவேவா பெடரல் பக்ஷயட்ட ஜயவேவா" என்று மாறிய விநோதம்!

## மிருகங்களுக்கு உள்ள...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாகிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவில் நடந்தது சரித்திரத்தில் துலக்கமாயிருக்கிறது. அங்கு குடியேறிய வெள்ளைக்காரன் திட்டமிட்டு, ஈவிரக்கமற்று அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்களைத் துரத்தி அழித்துவிட்டான். கனடாவில் வாழ்ந்த சுதேசிகளுக்கும் இக்கதிதான் நேர்ந்திருக்கும். ஆனால் மரணத்தறுவாயில் விக்டோரியா மகாராணி கனடாவின் செவ்விந்தியருக்கெனப் புறம்பான ஒதுக்கிடம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். 'அல்பேட் இராசகுமாரன் தீவு' சுதேசிகளின் பாதுகாப்பரணாக இன்றும் விளங்குகிறது.

மிருகங்கள் அழிந்து போகாது காப்பாற்றுவதற்குக் கூட (வனவிலங்கு) "பாதுகாப்புப் பிரதேசங்கள்" (Game Sanctuaries) ஏற்படுத்த வேண்டியிருக்கிறது ஆனால் இந்நாட்டில் மிருகங்களுக்கு இருக்கும் பாதுகாப்புக் கூட இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கில்லை. கனடாவில் இன்றும் செவ்விந்தியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென்றால், வெள்ளையர்கள் போய்க் குடியேற முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கும் தனிப்பிரதேசம் அவர்களுக்கிருந்து வருகிறது என்பதே அதற்குக் காரணம்.

அவுஸ்திரேலியாவிலே, இத்தகைய பாதுகாப்பைச் சுதேசிகளுக்கு வழங்குவதில் விக்டோரியா இராணி பிந்திவிட்டார். அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்கள் அநேகமாக அழிந்துவிட்டார்கள். ஆனால் நியூசிலாந்தின் சுதேசிகளான "மயோறிகள்" விக்டோரியா இராணியிடமிருந்து தமக்கென ஒரு பிரதேசத்தைப் பெற்று விட்டார்கள். ஆங்கிலேயரின் குடியேற்றத்தால் அழிந்துகொண்டு போன மயோறிகளுக்கு "விக்டோரியா மகாராணிப் பிரதேசம்" பாதுகாப்பளித்துக் காத்தது தனக்கென ஒரு பிரதேசம் இருந்தபடியால் தான் இன்று மயோறிகள் ஒரு தனி இனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஈரின மக்கள் வாழும் நாடுகளில், ஒற்றை ஆட்சி அரசமைப்பிருந்தால், ஒரு இனம் மற்ற இனத்தை அழித்துவிடும். இது மனித இயல்பு. அவாவும் சுயநலமும் மனித இயல்பில் முக்கியமானவை. "இது எனது நாடு; எனக்கு இந்நாட்டில் அதிகாரம் உண்டு. இந்நாடு முழுவதும் என்னுடையது. இதிலுள்ளதெல்லாம் என்னுடையது. இங்கே "மொழியென்றால் சிங்களம் மாத்திரந்தான்; உத்தியோகம் சிங்களவருக்கு மட்டும்; காணி, நிலம் சிங்களவருக்கு மட்டும்; பூமியிலுள்ள அத்தனையும் சிங்களவருக்கு மட்டுந்தான்" இப்படியாக நியாயம் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே, சபாநாயகர் அவர்களே! பிழை அரசியல் திட்டத்தில் தானிருக்கிறது. இது உங்கள் பிழையல்ல. எனவேதான் நாங்கள் உங்களைப் பிழை சொல்லவில்லை.

எமது கட்சியின் வாலிப முன்னணியினர் கையாளும் சுலோகம் ஒன்றுஉண்டு. "சிங்களவர்கள் எமது நண்பர்கள்; ஒற்றை ஆட்சியே எமது எதிரி." சிங்கள மக்களுக்கு எதிராக எமக்கு எவ்வித குரோதமும் கிடை-டாது. ஆனால் ஒற்றை ஆட்சியை எதிர்த்துப் போராடவே எமது கட்சி உதயமாயிற்று. ஒற்றை ஆட்சித் திட்டத்தை நொருக்க விரும்புகிறோம். நாங்கள் புரட்சிவாதிகள். (சபையில் சிரிப்பு) கூறுவதைப் புரிய மூளையற்றவர்கள் மற்றவர்களின் கூற்றைக் கேட்டு நகைப்பது வழக்கம் தான். அரசியல் திட்டத்தை நொருக்கக் கங்கணம் கட்டி நிற்கும் ஒரேயொரு கட்சி நாங்கள். நொருக்கவும் உடைக்கவும் திடசங்கற்பம் பூண்டிருக்கும் கட்சி ஒரு புரட்சிவாதக் கட்சியல்லாது வேறென்ன? அரசியல் சரித்திரம் அறியாத நண்பர்கள் நகைக்கட்டும். ஆனால் நகைப்பில் உண்மை அழிந்து விடப் போவதில்லை.

(தொடரும்)

## கண்மணி சிதம்பரேஸ்வரன் மறைவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர் மாவட்டம் பத்தாம் வட்டாரக் கிளையின் முழுநேர ஊழியர் திரு. அ. சிதம்பரேஸ்வரனின் பாரியார் கண்மணி கடந்த 11-ந் தேதி தமது 33-வது வயதில் காலமானார்.



தமிழரசுக் கட்சி நடத்திய தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் முதலான பொது நல சமுதாய சீர்திருத்த இயக்கங்களில் தமது கணவன் தீவிரமாக உழைத்தபோதெல்லாம் கண்மணியும் அவருக்கு அருந்துணை புரிந்து வந்தார்.

## சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பு அன்று வெளியில் நடந்தது

(சுதந்திரன் நிருபர்)

பெடரல் பக்ஷய பங்கவேவா (பெடரல் கட்சி விழ்க) என்று சபித்துக் கோஷமிட்ட சிங்கள மக்கள் பெடரல் பக்ஷயட்ட ஜெயவேவா (பெடரல் கட்சி வாழ்க) என்று வான்முட்ட முழக்கி வாழ்த்தத் தொடங்கி விட்டார்கள். சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் அரசாங்கப் பிரேரணை வாக்கெடுப்பில் கலந்துகொண்டபின்னர் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் பாராளுமன்றத்துக்கு வெளியில் வந்த சமயம் இந்த நிகழ்ச்சி நடந்தது.

அதே தினத்தில் எம். ஈ. பி. கட்சியின் தலைவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் மதில் மேல் பூனையாக இருந்து விட்டு வெளியே வந்த சமயம் பாராளுமன்றத்துக்கு வெளியே திரண்டிருந்த மக்கள் கூக்குரலிட்டு அவரைக் கிண்டலும் கேலியும் செய்தார்கள்.

கேட் முதலியார் காரியப்பர், ஜனாப் மாக்கான் மார்க்கார் ஆகியோர் வெளியே வந்த சமயமும் ஒரே கும்மாளம் பலமாகச் சத்தமிட்டு அவர்களைத் துளைத்தார்கள்.

ஆனால் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் வெளியே வந்தபோது 'பெடரல் பக்ஷயட்ட ஜெயவேவா' என்று குரல் எழுப்பினார்கள். தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைக் கண்டதும் நிலைமை உச்சக் கட்டத்தை அடைந்தது. மிக்க உணர்ச்சியோடு "செல்வநாயகம் மாத்தயட்ட ஜெயவேவா" (செல்வநாயகம் ஐயா வாழ்க) என்று முழக்கினார்கள். அத்தனை பேரும் சிங்களவர்கள்.

தமிழரசுக் கட்சியையும் தமிழரசுத் தந்தையையும் முன்பெல்லாம் திட்டி வந்த சிங்கள மக்களிடம் இந்த மனமாற்றம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் தமிழரசுக் கட்சி கொள்கை மாறாது உறுதியாக நிற்பதும் அந்தக் கட்சி புதிதாக அமைத்துக் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் நடந்துகொண்ட முறையுந்தான் என்று முக்கிய பிரமுகர்கள் பேசிக்கொண்டார்கள். திரு செல்வநாயகத்தின் தலைமையில் தமிழரசுக் கட்சி சிங்கள மக்களின் அபிமானத்தைப் பூரணமாகப் பெறும் காலம் அதிக தூரத்திலில்லை என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெவித்தார்கள்.

## தமிழரசுக் கட்சியை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

of the Tamils. This has fifteen members, and it was because they were dissatisfied with what Mr. Senanayake had to offer them that they joined in the Opposition's vote of censure and brought the Government down. Naturally they will want to make the most of their opportunity, and it is hard to blame them in view of their experience in the 1956 elections. (Both Mr. Senanayake's and Mr. de Silva's party sought votes by promising to promote Sinhalese over Tamil as the one official language.) But even if Mr. de Silva succeeds in building a coalition it will be a rickety structure, liable to be upset at any time if one party or another moves off in its own direction. This sort of precariousness made the late Mr. Bandaranaike's life wretched and contributed to the mishaps that befell Ceylon during his premiership. Another election, which must surely come soon in any case, will probably prove well worth the expense. Indeed, if it turns out to be costly for the swarm of small parties and independent candidates that complicated last month's voting so much the better.

மேற்படி தலையங்கத்தின் முக்கிய பகுதியின் சாராம்சம் வருமாறு:-

சிறிய கட்சிகளின் ஒத்துழைப்போடும் ஆறு நியமன அங்கத்தவர்களின் ஆதரவோடும் அரசாங்கத்தை அமைத்து நடத்தக் கூடிய நிலைமைக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ஸி. பி. டி. சில்வா வரலாம். ஆனால் அப்படி ஆக்கப்படும் அரசாங்கம் நின்றுபிடிக்குமா என்பது தமிழரசுக் கட்சியைப் பொறுத்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியில் 15 எம். பிக்கள் இருக்கிறார்கள். பிரதமர் டட்லி சேனநாயகா தமிழ் பேசும் மக்களுக்கு செய்யக்கூடியவற்றில் திருப்திகொள்ள முடியாது போன பட்சத்திலேயே அவர்கள் சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் எதிர் கட்சிகளோடு சேர்ந்து வாக்களித்து யு. என். பி. அரசாங்கத்தை வீழ்த்தினார்கள்.

இயற்கையாகவே அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது மக்களுக்கு நன்மை பெற விரும்பியிருப்பார்கள். அவர்களை அதற்காகக் குறை சொல்ல முடியாது. 1956 தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது இது தெளிவாகிறது. (1956 தேர்தலில் டட்லி சேனநாயகாவின் கட்சியும் ஸி. பி. டி. சில்வாவின் கட்சியும் சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்குவதாகக் கூறித்தான் மக்களிடம் வாக்குக் கேட்டன.)

## விற்பனைக்கு

68 ஏக்கர் பரப்புக் கொண்ட விவசாயக் காணி விற்பனைக்குள்ளது!

50 ஏக்கர் நெல் விவசாயத்துக்கு உகந்தது! 4 ஏக்கர் தென்னந் தோப்புக் காணி. மீதிக் காணியில் பரந்த அளவில் விவசாயம் செய்யலாம்.

மன்னார் மதவாச்சி ரோட்டிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள (Giant Tank) கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீர்ப்பாய்ச்சலாம்.

விபரத்துக்கு:—
S. KUMARAVELU,
JAFFNA JUNCTION,
ANURADHAPURA.


உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், கருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிடெட்,
கொழும்பு.



மே தினம்
மே தினத்தை முன்னிட்டு மே மாதம் 2-ம் தேதி எமது ஹுனுப்பிட்டியா ஆலை மூடப்பட்டிருக்கும் என்பதை எஸ்டேட் சுப்பிரின்டென்டன்களுக்கும், வியாபாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.
கொழும்பு கொமர்ஷியல் கம்பனி,
த. பெ. இலக்கம் 83,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆளும் ஆண்டி

சிறுகதை — எழுதியவர்: இளம்பூரணன்

அவனுரோ சொன்னது மாதிரி கல்லை மண்ணை அள்ளித் தின்னக் கற்பித்தானு 'அவன்.' இன்றைக்கெல்லாம் இந்த உலகையே ஏப்பம் விட்டிருப்போம். ஆனல் 'அவன்' அப்படிச் செய்து தொலைக்கவில்லையே!

நாலு துருப்பிடித்த இரண்டு சதங்கள். நாலு ஒரு சதங்கள். அவற்றில் இரண்டுக்கு நல்லாகக் கிழடு தட்டி விட்டது. தேய்ந்து உருவழிந்துவிட்டன. சந்தைப் பெண்களோடு கூடிக் குலாவி வந்ததால் சுண்ணும்புக் கறை படிந்த ஒரு பத்துச் சதம்—ஆக மொத்தம் இருபத்து இரண்டு சதம் என்முன் கிடந்தது.

நான் நாற்காலியில் இருந்தேன். அதற்கு அடி பொத்தல். என்முன் பெயருக்கு என்று நின்று தள்ளாடும் அந்த மேசை நிறைவெறிகாரனிலும் மோசம். இவற்றிற்கு எல்லாம் உரிமை கொண்டாடும் நான் அப்படி ஒரு காமா சோமா பேர்வழி அல்ல; ஆளும் வர்க்கத்தவன்!

—இன்று காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை மனைவி குனிந்த தலை நிமிரவில்லை. அப்படி வேலை. ஓர் அங்குலம்தானும் தப்பாமல் அவள் வீடு அடங்கலும் சல்லடை போட்டாள். கிடந்த சட்டி பெட்டி பானையில் ஒன்று மிச்சம் இல்லை. அந்த இரண்டு மணி நேர உழைப்பு அவமாகவில்லை. முயற்சி திருவினையாக்கும் என்பார்களல்லவா? அதன் பயன்தான் மேசைமீது கிடக்கிறது.

ஒரு கையிலே அத்தனையையும் எடுத்து மறுகையில் ஒவ்வொன்ருக எண்ணிப் போட்டேன். ஒன்று இரண்டு கூடிக் குறையாதா என்ற நப்பாசை. ஆனல் ஒரு சதம் கூடவும் இல்லை, ஒரு சதம் குறையவும் இல்லை. இருபத்து இரண்டு சதம் அப்படியே இருந்தது!

சற்று முன் அவ்வளவையும் மேசைமீது கொண்டுவந்து போட்டு விட்டு அவள் சொன்னுள்:

"இங்கே பாருங்கோ இதிலே இருபத்து இரண்டு சதம் இருக்கு. அஞ்சு சதத்துக்குக் கோப்பித் தூள் வாங்கி வாங்கோ என்ன?"

காசைப் பார்த்துக்கொண்டிருந்த நான் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

மிச்சமுள்ள பதினேழு சதத்தில் பன்னிரண்டு சதத்துக்கு அரைப் போத்தில் மண்ணெண்ணெய் வேறு என்னதான் வேண்டாம் என்ருலும் மண்ணெண்ணெய் தானே உங்களுக்கு வேணும். சாமம் சாமமாக விளக்கு எரிக்க எண்ணெய் வேண்டாமா?"

"என்ன குத்தியா காட்டுகிருள்? நான் முறைத்ததைச் சட்டை செய்யாமல் மேலே தொடர்ந்தாள்:

"குழந்தை சோர்ந்து போய் நித்திரையாய்க் கிடக்குது. அதுக்கும் பசி. அஞ்சு சதம் மிச்சம் அல்லவா? ஒரு சினியப்பம் வாங்கி வாங்கோ அவ்வளவுதான் என்ன எல்லாம் காதில் விழுந்ததா?"

மேசைமீது கையை ஊன்றிக்கொண்டு அவள் நின்ருள். நான் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபடி "உம்" என்றேன். புறத்தே உலகம் வெயிலில் வெதும்பிக்கொண்டிருந்தது, அகத்தைப்போல.

"நீங்கள் சொல்லுவீர்கள். நான் கேட்பேன்.

உங்களின் ஆழ நீளங்கள் எனக்குத் தெரியாதா? பத்திரிகை அது இது என்று வழியிலே அழுதுவிடாமல் ஞாபகம் வைத்து வாங்கி வாருங்கள். மறந்துவிடாதீர்கள். மறந்துவிடாதீர்கள் என்ருல் மறந்துவிடாதீர்கள்."

பத்திரிகை என்ருல் அவளுக்கு இளக்காரம்! அதைத்தான் என்னுல் சகிக்க முடியாது. பத்திரிகைதான் என்னை வளர்த்தது, பெண்ணே! என்று சொல்லத் திரும்பினேன். அவள் பக்கத்தில் இல்லை. இளைத்து நலிந்த அந்த எலும்புருவம் காற்றில் அலைபட்டதுபோல் உள்ளே போய் மறைந்தது.

பாவம், தெய்வம்தான் அவளுக்கு இரங்க வேண்டும்! நான் இரங்கி ஒன்றும் புண்ணியம் இல்லை. அப்படி ஏதாவது உண்டு என்ருல் கட்டாயம் வெறும் கை முழம் போடும்! மலடி பிள்ளைப் பெறுவாள்! குதிரை கொம்போடு தோன்றும்!

"தபால்!" வெளியே குரல் கேட்டது.

ஒரு வாசக அன்பர் எழுதியிருந்தார். வாசகர்கள் பலர் இப்படி எனக்கு எழுதுவது உண்டு.

"நீங்கள் கடைசியாக எழுதிய 'ஆண்டவன் விஜயம்' என்ற கதையைப் படிக்கும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. ஆஹா என்ன கதை அது. அருமை, அருமையிலும் அருமை.

"அது மாத்திரம் அல்ல உங்களின் ஒவ்வொரு படைப்பும் நெஞ்சில் தப்பாமல் பதிகிறது. அவற்றில் நாட்டின் நலன் உயிர்நாடியாகத் துடிக்கின்றதே அதைத்தான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

"உங்களின் தகைமைக்கும் பெருமைக்கும் நாடு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. எழுதுங்கள்! ஓயாது எழுதுங்கள். உங்கள் ஆற்றலுக்கும், அறிவுக்கும் அற்ப அணைதானும் போட வேண்டாம். தங்களின் அடுத்த கதை எப்போது? அதை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

குறும்பு விளையாடும் குழந்தையின் முகத்தின் முன் தகப்பனுக்குத் தன் துயரச் சுமைகள் எல்லாம் பஞ்சாய்ப் பறக்குமாம். இப்படி வரும் ஒவ்வொரு கடிதமும் எனக்கு ஒவ்வொருகுழந்தை.

கறபற என்று டிராயர் முனக அதை இழுத்தேன். அங்கே கிடந்தது ஒரு கற்றைக் காகிதம். விவசாயிக்கு நிலம் எப்படியோ அப்படி எனக்கு அந்தக் காகிதம்.

மனைவி உள்ளே எதோ கிழிசலுக்குத் தையல் போட்டுக் கொண்டிருந்தாள். வாசலைத் தாண்டி நான் வெளியே கால் வைத்தேன் வெறுங்கால்தான். சுளீரென்று முகத்தில் வெயில் உறைத்தது.

"என்னு... துண்டைப் போட்டுக் கொண்டு போங்கோ தலையிலே. பிறகு உடம்புக்கு வந்து விட்டால்..."

காற்றின் நாமமே இல்லாமல் பயங்கரமான ஒரு ஸ்தம்பிதம். இலை கொடி தளிர்களெல்லாம் சோர்ந்து வாடித் துவண்டன. பங்குனி மாதம் அல்லவா? ஒரே வியர்வைக் கசகசப்பு, நான் விறுவிறு என்று நடையைக் கட்டினேன்.

கௌண்டரில் இருந்தவன் என்னைக் கண்டதும் சிரித்தான்.

"என்ன சேர், கதைஅனுப்பப் போறியளா? கொளுத்தும் இந்த வெய்யிலத்திலே இப்படிப் பறந்தடித்து வருகிறியளே குடையைப் பிடித்துக் கொண்டு வந்தால் என்ன?"

அப்படியென்ருல் தலையிலே துண்டைப் போட்டுக் கொண்டு போங்கோ என்று மனைவி சொல்லியிருக்க மாட்டாளே என்று நினைத்தேன்.

"இங்கே கொண்டு வாங்கோ நிறுப்போம்......ஒரு அவுன்சுக்கு மேலே.........ஆ இருபது சதம் தாங்கோ... சரி...இந்தாங்கோ இதைஒட்டிப் போடுங்கோ......அட, இதென்ன வந்தது வரவில்லை.........அப்ப போறியளா?"

"ஓம் தம்பி மன்னிக்க வேணும். இப்போ நின்று பேச நேரம் இல்லை. நான் வரட்டுமா?"

"சரி சரி அவசரம் என்ருல் போயிட்டு வாங்கோ."

"உஸ்......அப்பா" என்று கொண்டே கடை வாசல் நிழலைத் தஞ்சம் அடைந்தேன்.

குனிந்து ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கடைக்கார இராமலிங்கம் நிமிர்ந்து பார்த்தான். எண்ணெய் பிசுபிசுக்க வியர்வையில் தோய்ந்து நின்றேன் நான். அருவருப்பது போல் அவன் முகம் சுழித்தது.

"என்ன வேணும்" அதட்டல்.

என்ன வேணும்? ஆமாம் மனைவி என்ன சொன்னுள்?

கோப்பி!

சினியப்பம்!

மண்ணெண்ணெய்!

நான் இவற்றை அவனுக்கு ஒப்பித்தேன்.

"மண்ணெண்ணெய்க்குப் போத்தில் இருக்கா?"

நான் விழித்தேன்.

"சாமான்களுக்கு காசு கொண்டு வந்ததா?"

அடாடா! காசு......

"என்ன ஐயா பதிலைக் காணும். என்ன மனுஷன் ஐயா நீர். எத்தனை நாள் சொல்லுவது. எப்ப தீர்க்கப் போகிறீர் கடனை? எப்பதீர்க்கப் போகிறீர் என்று கேட்கிறேன். இனிமேல் ஒரு சதம் கடன் இல்லை என்று முந்தா நாள் தான் சொல்லி விட்டேனே பிறகும் மானம், ரோஷம் இல்லாமல்......"

"இல்லை ராமலிங்க அண்ணை காசு கொண்டுதான் வந்தேன். இப்போது இந்த இரண்டு சதமும் தான் இருக்கு வழியிலே"—

"வழியிலே என்ன கொள்ளை போய் விட்டதா? ஒவ்வொரு நாளும் வரும் போது கணக்காக ஒவ்வொரு பொய்யும் வரும். அது சரி ரண்டு சதத்தை வைத்துக் கொண்டு இப்போ என்ன செய்யப் போகிறீர்?"

(13-ம் பக்கம் பார்க்க)

# மொழிப்பற்று இல்லாத....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென முயலும் கீழ்மக்கள் அல்லர் மானமுடைய தமிழர் என்பதையும் நன்ருக உணர்ந்து வடவெழுத்துக்களை மறுத்து ஒதுக்கத் தொடங்கினர். வட மொழியின் வேண்டா நுழைவுக்குக் கருவியாக நாளிதழ்களும் திங்கள் வெளியீடுகளும் செய்த சூழ்ச்சி தெரிந்ததும், தூய தமிழில் அவற்றைத் தமிழர் வெளியிடுவராயினர். அரசியல் மேடைகளிலும், பொது மேடைகளிலும், இசையரங்குகளிலும், திரைப் படங்களிலும் நல்ல தமிழ் தோன்றி இனிமை செய்வதாயிற்று. அரசியலையும் இனிய தமிழில் நடத்தும் மேன்மை தமிழருக்குத் தோன்றிவிட்டது. நாடோடிகள் போலத் தமக்கென ஒரு மொழிப்பற்று இல்லாமையால் வடமொழிக்கு அடிமையான ஒரு கூட்டம், தமிழர் பெருங் கூட்டத்தின் முன் தான் ஒரு சிற்றினம் என உணராது தனது நிலைபற்ற செல்வாக்கைக் கொண்டு தனதுதீச்செயலைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

## பழம் பகை நட்பாகாது

இந்நிலையில் திங்கள் வெளியீடுகளும் கிழமை வெளியீடுகளும், சிறுகதைகளையும் கட்டுரைகளையும் வெளியிடத் தலைப்பட்டன. அவையாவும் ஆங்கில நெறியைப் பின்பற்றித் தோன்றியனவாகும். அந்நெறி [illegible] பது ஆங்கில நெறி. அச்சொல்லை வேரோடு மொழி பெயர்த்தனர். அது நாம் முன்னே கண்ட எழுத்தாளர் என்ற சொல்லாயினமையின், சிறுகதை முதலியன எழுதுவோரை எழுத்தாளர் எனக்குறித்து வழங்கத் தொடங்கினர். நாளடைவில் சிறுகதைகளும், கட்டுரைகளும் செல்வாக்கும் பொருள் வருவாயும் நல்கின. அதனுல் எழுத்தாளர் பலர் தோன்றுவது இயல்பாயிற்று. கூட்டத்தில் எழுத்து அறிந்தோரும், அறியாதோரும் பிறமொழி அடிவருடிகளும் வேற்றுமையின்றிக் கலந்து இடம் பெற்றனர். அதனுல் அவர் வரைவனவற்றுள் தமிழுக்குக் கேடு செய்யும் எழுத்துக்களும் சொற்களும் கலந்து தோன்றுவனவாயின. அவற்றைக் கண்டதும், விழிப்புற்ற தமிழ் மக்கள் "பழம்பகை நட்பாகாது" என்ற உண்மையை உணர்ந்தனர்.

## மன்றங்கள் தோன்றின

இம்மலர்ச்சியின் பயனுக தமிழ் வளர்க்கும் எழுத்தாளர் மன்றங்கள் ஆங்காங்கே தோன்றி, மொழிப் பகையைப் போக்கித் தமிழ் மக்களின் பொது அறிவையும் சமுதாய வளர்ச்சியையும் எண்ணி இனிய பணியாற்றி வருகின்றன. இவற்றுள் கலந்து தொண்டாற்றுவதில் கற்ற இளைஞர்கள் பெரிதும் ஈடுபட்டு இருக்கின்றனர். அவர்கள் முயற்சியும் தொண்டும் உறுதியான பயனை விளைத்து வருகின்றன.

## நற்பணி

ஆங்கில எழுத்தாளருள் உயரிய சிந்தனையாளர் கலந்து பணி புரிகின்றனர். சிறுகதையாளரும், அரிய கட்டுரையாளரு , பாவாணரும் சேர்ந்த எழுத்தாளர் மன்றங்கள் அரசியல், பொருளியல், சமுதாய இயல் முதலிய இயல் வளம் பற்றிய சிந்தனையாளர்களின் சீரியபணியால் சிறப்புறுதல் வேண்டும். இசையறிஞரும் நாடக நன்மக்களும் எழுத்தாளர் மன்றத்தின் இனிய உறுப்பினராவர். எல்லாரும் இன்புற்று இருக்கும் நல்வாழ்வு நாட்டில் அமைவதே இம்மன்றங்களின் குறிக்கோள். உளத் தூய்மையும் வினையாண்மையும் மொழி வன்மையும் இந்த எழுத்தாளர்க்கு இன்றியமையாத இலக்கணமாகும். வழுப்பட்ட கொச்சை வழக்கும் வேற்று மொழி கலந்த சவலை நடையும் இழிந்த கீழ்மைக் கருத்தும் எழு ஞாயிறு போல ஒளி விட்டுத் தோன்றும் இந்த எழுத்தாளர் எழுத்தின் கண் இடம் பெருவாறு நோக்குவது இன்றைய சிறப்புப் பணியாகும்.

இவ்வகையில், தமிழ் எழுத்தாளரின் மன்றங்கள் இன்பம் நிறைந்த தமிழ் எழுத்தால், தமிழினம், பொருளும் அறமும் அறிவும் ஆண்மையும் சிறந்து ஓங்க முயலும் தன் தளரா முயற்சியில் வீறும் வெற்றியும் பெறுவதாக.

—மதுரை எழுத்தாளர் மன்றச் சிறப்பு மலர்.


## ஆஸ்த்மா என்ற தொய்வால் அவதிப்படும் அன்பர்களே

அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூரண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம்.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"

ஒரு நவீன சஞ்சீவி

"ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் ரூ. 15-00.

(மிக உபாதை தரக்கூடிய, நாள்ப்பட்ட ஆஸ்த்மாவுக்கு)

"ஆஸ்த்மடிக்கா" சாதாரணம் ரூ. 5-00.

வி. பி. பி. சதம் 85.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஓடர்களுக்கும்

டாக்டர்,

மொடர்ன் கிளினிக்

MODERN CLINIC

255, காலி ரோட், (பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்) கொழும்பு—4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிக்கு பஞ்சமில்லை

## தும்புத் தொழில் காப்பாற்றுகிறது

## கயிறு திரிக்கும் பொன்னம்மா சொன்ன சுவையான கதை

[பேட்டி கண்டவர்: "மாலதி"]



தும்புக்கட்டா? சுலபமாகக் கட்டி விடலாமே.

"பொன்னு! அந்த நாகு தேடாக் கவுத்தையே தும்பு தும்பாக்கிப் போட்டுதுடா! ஆரப்பத்தக் கவுறு வாங்கித்தான் திரிச்செடுக்கணும். போயித்து வா கடைக்கி..."

படுவான் கரைப் பட்டிகளிலே, யெல்லாம் இப்படிப் பிரபல்யம் வாய்ந்தது ஆரப்பற்றைக் கயிறு. தேற்ருத்திவு வெற்றிலே; தம்மங்கடவைப் புகையிலே; போரதிவுச் சட்டிப்பானே; கரவாகுப் பாய்;...இப்படிக் கூறிக்கொண்டே போனல், 'ஆரப்பற்றைக் கயிறு' எங்களையறியாமலே வாயிலே நுழைந்துவிடும். ஆமாம். அதே ஆரப்பற்றையிலேதான் நாங்கள் இப்போது நிற்கிறோம்.

அப்பப்பா! என்ன கொளுத்து கொளுத்துகிறது இந்த வெயில்! பகல் பதினொரு மணி. வியர்த்துக் கொட்டுகிறது.........

"வாருங்கள்! வாருங்கள்; உங்களுக்காக காலையிலிருந்தே காத்துக்கொண்டிருக்கிறேன். சரியான வெயிலில் தான் புறப்பட்டிருக்கிறீர்கள்." இப்படிப் பலத்த வரவேற்பு.

"என்ன செய்யலாம் 'பஸ்' கிட்டவேயில்லை." இது எனது அலுத்துக் களைத்த குரல்.

"யார் தம்பி இது?" அந்த அம்மாதான் கேட்கிறள்.

"நமது சுதந்திரன் இருக்கிறதே!- பத்திரிகை; அதன் பேட்டி......" குறுக்கிட்டாள் அம்மா.

"அப்படியா! வாருங்கள்! வாருங்கள்!..." திண்ணையிலே பாய் விரிக்கப்படுகிறது. அடியம்மா! சோடா கூட வருகிறதே! இந்தச் சுதந்திரனுக்கு இத்தனை மதிப்பா?...

"நாம் பேட்டிகாண வேண்டியவர் பக்கத்து வீடுதான். அழைக்கட்டுமா?" நண்பரின் கேள்வி இது.

"இல்லை இல்லை! அங்கேயே போவோம்."...அவர்களின் வாசலை அடைந்துவிட்டோம். அங்கே உரிமட்டைகளும் குவிந்து கிடக்கின்றன. இரண்டு பெண்கள் உரிமட்டைகளைக் கட்டையிலே வைத்து உயிரை வாங்கிக்கொண்டிருக்கிறர்கள். இவர்களுடன் இப்போது பேசக் கூடாது போலிருக்கிறதே!

எனது தயக்கத்தைக் கண்ட நண்பர் "அதோ இரண்டாவதாக இருக்கிறரே! அந்தப் பெண் மணி தான் தங்கள் பேட்டிக் குரியவர்" என்று சொல்லி வைத்தார். அந்தப் பெண் மணி கூட தன் வேலையை நிறுத்திவிட்டு என்னை நிமிர்ந்து நோக்கினர். தருணத்தைத் தவறவிடுவேனு? கேள்விகளை அடுக்கத் தொடங்கிவிட்டேன் நான்.

வயது முப்பதைந்து மதிக்கக் கூடிய பேரிளம் பெண். பெயர் ந. பொன்னம்மா. நல்ல உயர்ந்த தோற்றம். உழைத்து உழைத்து உருக்காகிய அங்கங்கள். களைப்பை மறந்து கயிறு திரிப்பதில் கன்றிப்போன கரங்கள். சளைக்காமல் எவருடனும் நகைச் சுவை ததும்பத் துடுக்காகப் பேசும் சுபாவத்தை முகத்திலே கோடிட்ட புன்னகை ரேகைகள் புலப்படுத்தின.

இவரது கணவர் ஓர் மீன் பிடித் தொழிலாளி, பெயர் முருகேசு. பிள்ளைகள் மூன்று.

"நீங்கள் எவ்வளவு காலமாகத் தும்புத் தொழில் செய்து வருகிறீர்கள்?" இப்படி நான் கேட்டதற்கு, அவர் பெருமையுடன் என்ன கூறினர் தெரியுமா?... "எங்களது குலத் தொழிலே அதுதானே! நான் விளுவறிந்த காலம் முதல், இதையே செய்து வருகிறேன்."

தும்பு வேலை என்பது சாதாரண-சுலபமான வேலையென்று எண்ணி விடுகிறோம். அதை நேரிலே காணவேண்டும். அல்லது அவர்களின் வாய் மொழியாகவே கேட்கவேண்டும். "கயிறு திரிக்கும் பொன்னம்மா! உன் கதையைக் கொஞ்சம் சொல்லம்மா!" என்று நீங்கள் அங்கலாய்க்கு முதல் அவரே கூறுகிறர் தனது தொழில் பற்றி. கேட்கிறீர்களா?

"உங்களிடம் சொல்வதற்கென்ன! எனக்கு எழுதவும் தெரியாது. வாசிக்கவும் தெரியாது நான் படிக்கவே இல்லை. ஆனல் இவ்வளவு காலத்து அனுபவமும் இல்லை என்று கூற முடியுமா? ஏன் பொய்யைச் சொல்ல, கடவுளே என்று கஞ்சிக்கு வழியில்லாமல் ஒரு நேரம் கூட நாங்கள் பட்டினிகிடக்கவில்லை. இந்தப் பெருமையிலே தும்புத் தொழிலுக்கு பாதிக்கு மேல் உரிமையுண்டு. அதைப் பற்றித்தான் விளச் சொல்லப் போகிறேன்.



உரி மட்டைக்கு உயிரையே வாங்குகிறீர்கள்.

காத்தான்குடியில் ஆயிரம் உரிமட்டைகள் பதினெட்டு ரூபாவீதம் வாங்குகிறோம். இந்த மட்டைகளை ஆற்றோரங்களிலே தாழ்த்து வைத்து ஒரு வருடம் சென்ற பின் எடுப்போம். ஆறு மாதத்திலும் இவற்றை எடுப்ப துண்டு. மட்டைகள் நன்ருக ஊற வேண்டுமானல் ஒரு வருடத்துக்கு விட்டு வைப்பதே நல்லது. அது வேலைக்கும் இலகுவாக இருக்கும். ஒரு தடவை மட்டைகளை மடுவில் போட்டு விட்டு, ஒரு வருடத்துக்குக் காத்திருந்தால் நல்ல வேடிக்கைதான்! தொடர்பாக தாழ்த்துக் கொண்டிருப்போம், எடுத்து வேலை செய்து கொண்டுமிருப்போம்.

ஊறிய மட்டைகளை எடுத்துப் பிரித்து விட்டுக் கொண்டு ஒவ்வொரு மட்டையாகத் தட்டி, தோலுரித்து மீண்டும் தும்பு பறக்கத் தட்டிப் பிரித்து வெய்யிலில் போடுவோம். காய்ந்தவுடன் தூசிகள் உதிர்ந்துபோக, தும்பு சுத்தமாகவிருக்கும். இந்தத் தும்புகளை சிறு சிறு புரிகளாக உருட்டி எடுப்போம். இவ்வாறு உருட்டப்பட்டவை 'தும்புக்கொட்டைகள்' எனப்படும். இவற்றைக் குவித்து வைத்துக் கொண்டு அமர்ந்தால், கயிறு இருத்தல் கணக்கிலே பெருகிக் கொண்டே போகும்.

எங்களுக்கு கையினுல் திரிப்பதைத் தவிர வேறு முறைகள் தெரியாது. நாளொன்றுக்கு பத்து இருத்தல் வரை திரிக்கலாமாயினும் வேறு வேலைகளும் செய்ய வேண்டியிருக்கும். இருத்தல் முப்பது சதவீதம் வியாபாரிகள் வாங்கிக் கொள்கிறர்கள். ஆரப்பற்றை, காத்தான்குடியில் கயிற்றுக் கடைகளே தனியாக இருக்கின்றன."

"கேட்டீர்களா! இவ்விதம் திருமதிபொன்னம்மா கூறிக்கொண்டிருக்கும் போதே ஒரு சம்பவம் நடந்தது. அவர் மட்டையை அப்படியே விட்டு விட்டு எழுந்து வந்தார். 'தும்புக்கொட்டை'கள் ஒரு புறம் குவிந்து கிடந்தன. அவற்றிலொன்றை தானெடுத்து, விரல்களிலும் முழங்கால் திரித்துக்கொண்டே 'இப்படித் தானே திரிப்பது!" என்றேன். "கஞக்"! திரும்பினேன். அந்தத் தங்கையின் இதழ்கள் நெளிந்தன. "இப்படித் திரித்தால் ருத்தலுக்கு ஒரு வாரமெடுக்குமே!" அந்த வதனத்திலே தனிப் பெருமிதம் பொலிந்தது. எனக்கு வாயடைத்து விட்டது. திருமதி பொன்னம்மாவைக் கவனித்தேன். அதற்கிடையிலே நாலு பாகம் கயிறு வளர்ந்து விட்டது. 'சித்திரமும் கைப் பழக்கம்' என்பார்களே! அந்தக் கைப்பழக்கம் அங்கும் காட்சி தந்தது. தும்புப் புரிகளை இடது கையிலே வைத்து மறுகையினுல் உருட்டுகிறர். உருவாகி நெளிகிறது கயிறு!

"உங்களுக்குத் தும்புக் கட்டுக் கட்டத் தெரியாதோ!" என்றேன். "இதோ இவளுக்குத் தெரியுமே! " என்று அருகிலிருந்த பெண் மணியைப் பார்த்தார் பொன்னம்மா. அந்தப் பெண் அதைக் கட்டிக் காட்டவே துணிந்து விட்டார். தும்புக்கட்டா! எப்படிக்கட்டுவது? அவர் கூறுவதைக் கேளுங்கள்.

"அடித்த தும்புகளைக் காய வைப்போமல்லவா? அவற்றில் அளவான மூன்று கத்தைகளை உருட்டி எடுக்க வேண்டும். அதற்கு முதலே மெல்லிய கயிறுகளும் கம்புகளும் தயாராக விருக்க வேண்டும். ஒரு மரத்திலே கயிற்றைச் சுற்றிக் கொண்டு கத்தைகளைக் கம்புடன்

(13-ம் பக்கம் பார்க்க)



கயிறு திரிக்கும் பொன்னம்மா;

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலு முள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்சர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி
# ஆடல்பாடல்காட்சி

# மற்றத் தம்பிகளைவிட தம்பி சிவாஜி கெட்டிக்காரன்

## அண்ணாத்துரை பாராட்டு

"தி. மு. கழகத்தில் இருந்து நடிகர்கள் ஓடிவிட்டார்கள்!" என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள்! யார் ஓடினார்கள்? ஒரு நடிகரை சொல்லட்டுமே!

எங்கள் கட்சியில் ஒரு நடிகன் சேர்ந்தால், நல்லவன் ஆவான்! நாடு அறிந்தவன் ஆவான்! நாட்டையும் ஆள்வான்! ஆனால், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தால், நடிப்புப் போய்விடும்—நல்லவர் என்ற பெயர் போய்விடும்—நாட்டில் இருந்த மதிப்பும் போய் விடும்!

ஆகவேதான் சிவாஜி கணேசன் சற்று தூரத்தில் இருந்தே பேசுகிறார். மற்ற தம்பிகளைவிட இந்தத் தம்பி கெட்டிக்காரன்! இருக்கிற மதிப்பை இழக்காமல் இருக்க எனக்கு எந்த சாயமும் பூசாதீர்கள்!'' என்று கூறி இருக்கிறான்.

மேற்கண்டவாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு ஸி. என். அண்ணாத்துரை கூறினார். காஞ்சீபுரத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய திரு அண்ணாத்துரை சிவாஜி கணேசன் பெயர் ரோட்டுக்கு வைத்ததுபற்றியும் காங்கிரஸ் ஆட்சியைக் கண்டித்தார்.



அவர் சொன்னதாவது—


ஏழைப் பிள்ளைகளின் இலவச சாப்பாட்டுக்கு சிவாஜி கணேசன் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். சிவாஜி கணேசனை நேருவுடன் நிற்க வைத்து, காங்கிரஸ்காரர்கள் படம் எடுத்துக்கொண்டார்கள். 'எங்கள் முகாமில் நடிகர் திலகம்' என்று ஊர் ஊராகப் பெருமை பேசினார்கள்!

ஆனால், தெருவுக்கு சிவாஜி கணேசன் பெயரை வைக்க அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை! சிவாஜியைப்பற்றி எந்தக் கட்சிக்காரர்கள் பெருமையாகப் பேசுகிறார்களோ, அந்தக் கட்சியின் அரசாங்கம்தான் அனுமதி அளிக்கவில்லை.



நடிகர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பது இதில் இருந்து தெரிகிறது!

இவ்வாறு காஞ்சீபுரத்தில் நடந்த கூட்டத்தில் அண்ணாத்துரை கூறினார்.



தளிர்க்கரம் தீண்டும்போது தாயின் முகம் மலர்வதற்கு கேட்கவா வேண்டும்? பண்டரிபாயின் சொந்தப்படமான ஸ்ரீ பாண்டுரங்கா புரொடக்‌ஷன்ஸ் 'மஹாலக்ஷ்மி'யில் பண்டரிபாயும் மாஸ்டர் பாபுவும்

# திரைப்படத் தொழில் வளர என்ன செய்யலாம்?

## நடிகர் சகஸ்ரநாமம் வழி சொல்கிறார்

திரைப்படத் தொழில் எத்தனையோ கலைஞர்களுக்கும், தொழிலன்பர்களுக்கும் வாழ்வளித்து வருகிறது. இந்தத் தொழிலில் இன்று நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

### உயர்ந்த நோக்கம்

நல்ல படமாக எடுக்க வேண்டுமென்று எடுத்துவிட்டு வசூலில் தோல்வி அடைந்ததும், சிலர் இந்தத் தொழில் நமக்கு லாயக்கில்லை என்று அலுப்பினால் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒருவர் வெற்றி தோல்வியினால் பாதிக்கப்பட்டு தம் தொழிலை மாற்றிக்கொள்வது முறையாகாது அச்சத்தினாலும் வெறுப்பினாலும் ஒருவர் தம் தொழிலை விட்டாரானால் எந்த நன்மையும் கிடைக்காது.

நல்ல செயலை நல்லெண்ணத்தோடு செய்யும் போது பூலோகத்திலேயே சொர்க்கம் காணப்படுகிறது. திரைப்படத் தொழிலையும் மேன்மையான நோக்கத்துடன் செய்தால் சமுதாயம் மேன்மைப்படும் என்பது என் திடமான நம்பிக்கை.

### புகழ்ச்சியில் அடக்கம்

எனக்குத் தெரிந்தவரையில் இன்று கலைத்துறையில் தினையளவு நல்லது செய்தால் கூட பனையளவு பெருமை கிடைக்கிறது. ஆனால் இப்படி அளவுக்கு மீறி தாங்க முடியாத பெருமை கிடைப்பதிலும் அபாயம் இருக்கிறது அடக்கம் போய்விடக்கூடும். பெருமையையும், பாராட்டுதலையும் தாங்குவதற்கு அடக்கம் மிக மிகத் தேவை. அது இருந்தால் தான் மேன் மேலும் வளர இயலும்.

### நம் கலைஞர்கள்

படத் தொழிலில் லாபம் கிடைக்க வேண்டுமென்றால் நல்ல வசூல் ஆகவேண்டும், என்பது ஒரு கூறு ஆனால் படம் எடுக்கும் செலவு குறைவாக இருக்கவேண்டும் என்பதும் மற்றொரு முக்கியமான கூறு. இதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்று பட முதலாளிகள் படத்தின் வசூல் நிலைக்கு ஏற்றவாறு, செலவைச் சிக்கனமாகச் செய்ய வேண்டு

(13-ம் பக்கம் பார்க்க)

# சரோஜாதேவிக்கு பதில் வைஜயந்திமாலா

## இந்தி கல்யாணப் பரிசு படத்தில்

இந்தி கல்யாணப் பரிசு படத்தில் சரோஜா தேவி நடிக்கமாட்டார். அவருக்கு பதிலாக அப்படத்தில் நடிப்பதற்கு வைஜயந்திமாலா ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வீனஸ் பிக்‌ஷர்ஸாரின் வெற்றிப் படமான கல்யாணப் பரிசில் சரோஜா தேவி கதாநாயகியாக நடித்து பெரும் புகழ் ஈட்டினார். "பெல்லி கனுக" என்ற பெயரில் அந்தப் படம் தெலுங்கில் தயாரிக்கப்பட்டபோது அதிலும் சரோஜா தேவியே கதாநாயகியாக நடித்தார்.

கல்யாணப் பரிசு இப்போது இந்தியில் தயாரிக்கப்படவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதில் கதாநாயகனாக பிரபல இந்தி நடிகரான ராஜ்கபூர் நடிக்கவிருக்கிறார். அவரோடு சேர்ந்து கதாநாயகியாக நடிப்பதற்கு வைஜயந்திமாலாவைத் தயாரிப்பாளர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.




### வங்காளிப் படத்திலும் வைஜயந்தி

டைரக்டர் நிட்டின் போஸ் முதல்தர நடிகர், நடிகைகளை வைத்து உயர்தரமான வங்காளிப் படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

அந்தப் படத்தில் டிலிப் குமார் கதாநாயகனாக நடிப்பார் என்றும், கதாநாயகியாக வைஜயந்தி நடிக்க ஏற்பாடு செய்யப்படுவார் என்றும் தெரிய வருகிறது.

[illegible] வர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.




விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற வெல்லேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதியாய்ந்த தண்ணீர் பம்புகள், அநேககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உபகரணங்கள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:

ராஜரத்தினம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது—அங்கத்தவர்களின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தபாற்பெட்டி 88, கொழும்பு.
காட்சிஅறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்.
போன்: 78851.

உயர்ந்த சேவை

1½" மோடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மோடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மோடல்-மணித்தியாலம் 4800-16800 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டுக், சக்ஷன் லிவ்ட்டுமே தேவை

ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். மூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம். போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் ஆதரவும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் கிராமப் பகுதிகளில் கடலிற் பிறந்து, கடலில் வாழ்ந்து, கடலில் மரிக்கும் ஏழை கமக்காரர், தமது பொருள்களை உற்பத்தி செய்வதற்கான பணவுதவி விதை, உரம் விவசாயக் கருவிகள் ஆகியவை அளித்தல் போன்றவற்றைச் செய்வதுடன், அவ்வுற்பத்தியாளர் விளைவித்த பொருள்களை நல்ல விலைக்கு விற்கவும், தரகர்களை அகற்றவும், விவசாயிகளுக்கு கூடிய இலாபம் பெற்றுத் தரவும் உதவியளிக்கின்றது.

இது போன்று கிராமப் புறங்களில் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவரது உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கவும், கைவினைஞரது, நலஉரிமைகளைப் பேணவும் பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. இவைதவிர கிராமத்தவரிடையே சிக்கன வாழ்வைப் புகுத்தி அவர்களிடம் சேமிப்பு பழக்கத்தைவளர்ப்பதற்காக கூட்டுறவு சிக்கன சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும் உணவுப் பொருள்களையும் பிறபாவனைக்கான பொருள்களையும் நியாய விலையில் பெறுவதற்காக பொருள் நுகர்வோர் அல்லது பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கருமமாற்றுகின்றன.

இச் சங்கங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற் போல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. 18,000 கிராமங்களில் இத்தகைய சங்கங்கள் படிப்படியாக நிறுவப்படுறன. மேற்கூறிய பலவிதமான கூட்டுறவுச் சங்கங்களின் கருமங்களை ஒரே சங்கத்தின் மூலம் ஆற்றுவதும் விதி நிர்மாணித்தல் சிறிய நீர்ப்பாசன வேலைத் திட்டங்களைச் செய்தல், பள்ளிக்கூட கட்டடங்களை கட்டுதல், இன்னும் சிறு சிறு கொந்தராத்து வேலைகள் செய்தல் ஆகியவற்றில் கிராமத்தவரை ஈடுபடுத்தி அவர்களுக்குப் பிழைப்புக் கொடுப்பதும் இப்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கமாகும்.

கடற்கரைப் பிரதேசத்திலமைந்த கிராமங்களுக்கு விசேட விதமாக உதவி புரிந்து வரும் அரசாங்கப் பகுதி மீன்பிடி இலாகாவாகும். கடற்றொழிலாளருக்கு இயந்திரப்படகுகள் வழங்கியும், நைலான் வலைகளைக் கொடுத்தும், விடுகட்டுத் திட்டமொன்றை நடாத்தியும் மீன்பிடித் தொழில் நிபுணரைக் கொண்டு பயிற்சியளித்தும் இவ்விலாகா துணைபுரிகிறது. மீன் உணவு மிகச் சத்துள்ள உணவாதலால் நாட்டு மக்களுக்கு மலிவான விலையில் அது கிடைக்கக் கூடிய வழி வகைகளை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டியது அவசியமாகும் நவீன முறைகளை மேற்கொண்டு மீன்பிடித் தொழிலை நடத்துவிப்பதின் மூலம் கடற்றொழிலாளரது பொருளாதாரம் வளரவும், பொதுமக்கள் நியாயமான விலையில் நிறைந்த மீன் உணவு பெற்று உடல் நலம் பெறவும் அரசாங்கம் வழிவகுக்க வேண்டும்.

கிராமியப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் அரசாங்க அலுவற்பகுதிகளும் தனிப்பட்ட தாபனங்களும் ஈடுபட்டுழைத்து வருவது போற்றக் கூடியதாயினும், அவற்றின் வாயிலாக கிராம சமுதாயம் பொருளாதாரத் துறையில் ஓரளவு முன்னேறியுள்ளதென்பது உண்மையேயாயினும், கிராம மக்களுக்கு இன்னும் அதிகமாகச் செய்யப்பட வேண்டிய பல உள! ஒரு தேசத்தின் வாழ்வு அத்தேசத்திலுள்ள கிராமங்களின் வாழ்விலேயே தங்கியுள்ளது" என்ற காந்தியடிகளின் தத்துவத்தைக் கருத்திற் கொண்டு, அரசியலாரும் சமூகசேவையாளரும் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுழைப்பார்களாக.

## "சிந்தனையின் ...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தரும் அறிவாயுதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அறிவாயுதம் அகிலத்தின் அணையா ஜோதி என்று அன்று வீரமுழக்கமிட்டார் அவனியில் இணையற்ற ஞானி சாக்கரட்டீஸ். பழமை தழுவிய இளைஞர்களிடையே புதுமையைப் புகுத்தி மறுமலர்ச்சியை உண்டுபண்ணினார். அறியாமை மண்டிக் கிடந்த மக்கள் உளத்தில் அறிவென்னும் அகல் விளக்கேற்றி வைத்தார். ஆனால் இவற்றிற்கெல்லாம் ஆதிகாரணமாயிருந்த ஞானிக்குக் கிடைத்த பரிசு—அந்த நாட்டு ஆட்சியாளர்கள் அளித்த தீர்ப்பு—ஏதென்ஸ் நகரத்து மங்கா மாணிக்கத்துக்கு கிடைத்த கிரீடம் ஓர் நச்சுக்கோப்பை. சிந்தனைவரிசையின் மூன்றும் ஒற்றையும் வெற்றிகரமாகக் கிழிந்தது.

## கஞ்சிக்கு . . .

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இறுக்கி வரியவேண்டியது. தான் ஒரு தும்புக் கட்டு இப்போது முப்பது சதம் விலை போகிறது. நாளொன்றுக்குப் பத்துத் தொடக்கம் இருபது வரை கட்டலாம்."

மீண்டும் திருமதி பொன்னம்மாவை நான நோக்கினேன்

"ஒரு மாதத்துக்கு சுமார் எத்தனை மட்டைகள் தேவைப்படும்?"

"ஐயாயிரம் மட்டை வரை அடிக்கிறோம்."

"குடும்பத்தின் வருமானம் என்ன? எவ்வளவு செலவாகிறது? மிச்சம் ஏதாவது கிடைக்குமா?"

"அவர் ஐந்து ரூபா வரை உழைப்பார். அதுவும் நிச்சயமில்லாதது. மீன்பிடி உங்களுக்குத் தெரியாததா? அதிர்ஷ்டமுமடிக்கும், அரோகராவாகவும் முடியும். நான் மூன்று ரூபா வரை உழைப்பேன் குடும்பத்துக்கு ஆறு ரூபா வரை செலவாகும். பிறகென்ன மிச்சம் பிடிப்பது?

"இங்கே உங்களுக்கென்று சங்கங்கள் ஏதாவது இல்லையா"?

"சங்கம் இருக்கிறது. சரியாக இயங்குவதில்லை. ரூ 5/- பங்குப்பணம் கட்டினால் ரூ 50/- முற்பணம் கொடுப்பார்கள். அதைக் கொண்டு தொழில் தொடங்கலாம். அதுவும் இப்போது தூங்குகிறது."

## ஆளும் ஆண்டி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"வேறு ஒன்றும் வேண்டாம். ஒரு சீனியப்பம் தா. ஐந்து சதம் தானே. மூன்று சதத்தை முந்தின கடனோடு சேர்த்துக் கொள். காசு வந்ததும் எல்லாவற்றையும் தீர்த்து விடுகிறேன்."

"அதெல்லாம் இங்கே முடியாது. செப்பால் அடித்த சல்லிதானும் கடன் இல்லை என்றால் இல்லை தான். அதுக்கு, பிறகு மறு பேச்சு இல்லை"

"சரிபின்னே இந்த இரண்டு சதத்துக்கும் பிஸ்கோத்து கொடு போதும்."

காசை வாங்கியவன் சட்டென்று அதைப் புழுதியிலே வீசி எறிந்தான். ஏன்? என்ன தப்பு?

"என்ன, செல்லாத காசையா என் தலையில் கட்டப் பார்க்கிறீர் என்ன பிழைப்பு ஐயா இது? இப்படியும் வயிறு வளர்க்க வேணுமா? சீ......"

குனிந்து புழுதியிலே காசைத் தேடினேன்.

## திரைப்பட . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யது அவசியமாகும். அதற்கு அப்படத்தில் நடிக்கும் நடிக, நடிகையர் யாவரும் துணை புரிதல் வேண்டும்.

### சுயநலக் கோஷ்டி

கட்சி சேர்த்துக்கொண்டு தொழில் புரிவதாலும் இன்று படவுலகில் தீமை தலைவிரித்தாடுகிறது அரசியல் கட்சிகளைப் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை. "நான் என்னைச் சேர்ந்தவன்" என்று நினைக்கும் போது வாழ்வு கெட்டுப் போகிறது. உலகம் பெரியதாக இருக்க மனதைச் சிறியதாக்கிக் கொண்டு ஒருவர் வாழ்வில் இன்னொருவர் குறுக்கிடக் கூடாது.

அரசாங்கமும் இந்தத் தொழிலை இன்னும் கொஞ்சம் நேசமனப்பான்மையோடு நினைக்க வேண்டும்; தகுதியுள்ள படங்களுக்கு அவசியமானபோது தமாஷா வரியிலிருந்து விதிவிலக்களித்து ஆதரவு காட்டவும் அவர்கள் முன் வரவேண்டும். இப்படிச் செய்தால் படங்களின் தரம் உயர்வதோடு சமுதாயத்தின் தரமும் உயரும்.


கொழும்பில் 5-வது வாரம்!

● கூனன் நிமிர வேண்டும்!
● குருடன் பார்வை பெறவேண்டும்!
● கோழை வீரனாக வேண்டும்!

இந்தக் கொள்கை முழங்க

முருகன் (ஜிந்துப்பிட்டி) ராணி (யாழ்ப்பாணம்)

ஆகிய தியேட்டர்களில்
காண்பிக்கப்படுகிறது!

நடிப்புக்கோர் திகலமெனத் திகழ்கின்ற செம்மல் நாடெங்கும் கலைத்திறந்தால் புகழ் மணக்கும் பொற்பாவையுடனே போற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும் பாராட்டு பெறுகின்ற பான்மையிலே நடித்து.........தமிழ் கொழிக்கும் எழுத்தாலே தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே பட அமைப்பு முறை—படைப்பு முறை நனிசிறக்க மேன்மைமிகு மேகலா தருகின்ற திரை விருந்து.

சிவாஜி கணேசன்
சாவித்திரி மைனாவதி
ஓ. ஏ. கே. தேவர்
நடித்த




6-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) ரீகல் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நெல்ஸன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை) இம்பீரியல் (மட்டக்களப்பு)

ஆகிய திரைகளில்

சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா-வசுந்தராதேவி
வனஜா-எஸ். வி. சுப்பையா-சரோஜாதேவி-கே. ஏ. தங்கவேலு நடிக்கும்

இரும்புத் திரை

6-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கெயிட்டி ரோயல் (பண்டாரவளை) அசோக்கமாலா (நீர்கொழும்பு) தாஜ்மஹால் (மாத்தளை) இம்பீரியல் (இரத்தினபுரி) சந்திரலோக (கம்பளை) மிட்லண்ட் (நாவலப்பிட்டி)

ஆகிய தியேட்டர்களில்

கல்யாணிக்குக் கல்யாணம்

ராஜேந்திரன்-ராஜம்-தங்கவேலு-மைனாவதி-பாலையா நடித்தது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம் : 27

## வஞ்சகம் பேசேல்

மனிதனின் செயல்கள் யாவும் அவனின் மன வளத்தைப் பொறுத்தது. செழிப்பான நிலத்தில் பசுமையான செடிகள் வளருவது போல் பண்பட்ட மனத்தில் பண்புள்ள எண்ணங்கள் தோன்றும். காய்ந்து வரண்டுபோன பாலை நிலத்தில் முள்ளும் முரடுமான மரங்கள் வளருவது போல் உலுத்து வலுத்துப் போன மனத்தில் வெறுத்து விரட்ட வேண்டிய சிந்தனைகள் முளைக்கும்.

மனம் சுத்தமாக இல்லாத போது எமது செயல்களும் அசுத்தமாகவே இருக்கும். பிறனை வெறுக்கவும், அவனை வஞ்சிக்கவும் எண்ணங்கள் உண்டாகும். இந்த அழுக்கு மனப்பான்மைக்கு ஆசை தான் காரணம். ஆசைகளின் ஆபாசம் தலைக்கேறி அயோக்கியத்தனமாக நடந்து கொள்கிறோம். மற்றவனைத் தூற்றவும், தூசிக்கவும் வஞ்சக வார்த்தைகளைப் பேசி வாட்டி வதைக்கவும் எத்தனிக்கிறோம்.

பாசி படிந்த நிலத்துக்கு பச்சை நிறம் ஏற்படுவது போல் மாசு படிந்த மனத்துக்கு வஞ்சக எண்ணம் ஏற்படுகின்றது. மனத்திலே எண்ணங்கள் ஏற்பட வாயினாலே அவற்றைப் பேசிவிடுகிறோம். வாயினாலே பேசிய பின் செய்கையிலே காட்டி விடுகிறோம்.

வஞ்சகம் மனதில் அழுக்காறைத் தந்து விடும். அழுக்காறு இழுக்கான செயல்களைச் செய்யச் சொல்லும். இழுக்கான செயல்கள் வழுக்கலான பாசிபடிந்த நிலத்தைப் போன்றது. அதில் நடந்தால் நிச்சயம் விழுந்து காலை ஒடித்துக் கொள்ள வேண்டியது தான். பாசியை அகற்றிவிட்டால் நிலம் சுத்தமாவது போல் துர் ஆசைகளை அகற்றிவிட மனம் சுத்தமாகி விடும்; வஞ்சகம் வரண்டு விடும்.

மற்றவன் எம்மை ஏற்றிப் போற்றினாலும் அல்லது தூற்றித் தூரத்தினாலும் மனத்தில் வஞ்சக—அழுக்காறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். விழுந்த குழந்தை எழுந்திருக்கத் தானே முயற்சி செய்வது போல் அழுக்காறு கொள்ளாது விழுப்பாக வாழ எம் மனம் தான் முயற்சிக்க வேண்டும்.

"பொல்லான் என்பர்;
அதனாலென்?
புனிதன் என்பர்;
அதனாலென்?
கல்லான் என்பர்;
அதனாலென்?
கல்லன் என்பர்;
அதனாலென்?
சொல்லா வசைகள்
சொன்னாலென்?
சூழ்ந்து நின்று
புகழ்ந்தாலென்?
எல்லா நாளும் ஒரு நாள்
போல்
இருக்க வேண்டும் என்
மனமே!"

—கவிமணி

—ஏ. ஜீ. ஆனந்தன்




## "சிந்தனையின் நிந்தனை"

—ஆ. மோசேப் கனகசிங்கம்—

குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் என்றார் ஆராய்ச்சியாளர் டார்வின். மனிதன் சிந்திக்கும் மிருகம் என்றார் அறிஞர் அரிஸ்டாட்டில். மனிதன் சிந்திக்கும் பொழுதுதான் மிருக நிலையிலிருந்து மாறுகிறான் எனினும் சிந்திக்கத் தவறின் மிருக நிலையிலிருக்கிறான் என்று விளக்கம் தருகிறார் அறிஞர். நாலு எழுத்தான சிந்தனை என்ற சொல்லை வைத்துக்கொண்டு கடந்த கால வரலாற்றுச் சரித்திர ஏட்டின் நாலு ஒற்றைகளைப் புரட்டி பார்த்தால் சிந்தனை செய்தவர்களின் நிலைஎன்ன? அவர்களுக்கு அவனி வாழ் மக்கள் அளித்த பரிசுஎன்ன? இதனால் மக்கள் அடைந்த மாற்றமென்ன? என்பனவற்றிற்கு விளக்கம் கிடைத்து விடும்.

"அடிமையாகவும் இரேன் அடக்குபவனாகவும் இருக்க மாட்டேன்" என்றார் ஆபிரகாம் லிங்கன். சிறு வயதிலே வித்திட்ட எண்ணத்தின் பிரதி ஒலிதான் மேலிருக்கும் சொல்லடுக்கு. ஓர் இனம் மற்ற இனத்தை அடிமைகள் என்று நினைத்து மார்க்கட்டுகளிலே—சந்தைகளிலே மக்களை விலைபேசி விற்கின்றனர். அடிமைகள் என்ற அசட்டுத் தத்துவத்தை வைத்துக்கொண்டு மக்களை வாங்கவும், விற்கவும் கூடிய கசாப்புக் கடைப் பொருளாக நினைத்துவிட்டனர் வெள்ளையர்கள் இவ்வியாபாரத்தை அடியோடு இந்த நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று நினைத்துச் சாகாத சாதனை மூலம் வெற்றி கண்டவர் தான் அந்த மாவீரன் ஆபிரகாம் லிங்கன். உலக மக்கள் மத்தியிலே இன்று மதிக்கப்படும் மேதைக்கு அந்நாட்டு மக்கள் அளித்த அன்பளிப்பு என்ன? நாடக அரங்கிலே நாடகத்தைப் பருகிச் சுவைத்துக்கொண்டிருந்த வேளையிலே ஓர் துப்பாக்கிக் குண்டு அவர் ஆக்கையை நோக்கிப் பாய்ந்து உயிரையே உண்டு ஏப்பமிட்டது. அடிமைத் தளையை அகற்றிய மாவீரனுக்குக் கிடைத்த வெகுமதி அடிமை வியாபாரத்தை—விரட்டிய வீரனுக்குக் கிடைத்த பரிசு-ஓர் துப்பாக்கிக் குண்டு சிந்தனைச் சிறப்பின் முதலாம் ஒற்றை கிழிந்தது.

அன்று சுதந்திர தாகப் பாக்கள்மூலம் மக்கள் உளத்தைத் தாக்கல் செய்தான் பார்புகழ் பாரதி. அந்தச் சுதந்திர கீதம் ஒலித்த நேரத்திலே—பாரதப் பூமியிலே—தமிழகத்தின் தரணியில் அண்ணல் காந்தி அவதரித்தார். தன் உடல், பொருள், ஆவி மூன்றையுமே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்தார். வெள்ளையனை வெளியேற்ற வேண்டும். அன்னியர் ஆட்சி அகல வேண்டும். மக்கள் ஆட்சி மலர வேண்டும் என்று எண்ணி அகிம்சையை ஆயுதமாகக்கொண்டார். சுதந்திர சுலோகங்கள் அன்னியனின் ஆட்சிப்பீடத்தை ஆட்டின. சுக்குநூறாகச் சிதறியது அடிமைத் தளை. இந்திய நாட்டிலே சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. ஆனால் அண்ணல் காந்திக்குக் கிடைத்த பரிசு—அரை நிர்வாணனுக்குக் கிடைத்த அன்பளிப்பு—சுதந்திர இந்தியாவின் விடிவெள்ளிக்குக் கிடைத்த வெகுமதி—வருங்காலச் சந்ததியின் நம்பிக்கைத் தூணுக்கு வழங்கிய நன்கொடை—இந்து முஸ்லிம் மக்கள் ஒற்றுமைக்காக பாடுபட்டவர் அடைந்த லாபம் மூன்றே மூன்று துப்பாக்கி ரவைகள். சிந்தனையின் இரண்டாம் நிந்தனை ஒற்றை கிழிந்தது.

ஏற்றமிகு ஏதென்ஸ் நகரத்து எழில்மிக்க வாலிபர்களே! நாற்றமெடுக்கும் சமுதாயத்தில் நறுமணம் கமிழ்விக்க இதோ! அழைக்கிறேன் சாக்கரட்டீஸ். வீரம் விலைபோகாது விவேகம் துணைக்கு வராவிட்டால் தீட்டிய கூர்வாள்களும் தினவெடுத்த தோள்களும் இருந்தால் மட்டும் போதாது தீரர்களே! இதோ! நான்

(13-ம் பக்கம் பார்க்க)

## பாரதிதாசன்

பாரதியார் என்றாலே பலர் பயப்படுவர். பாரதிதாசன் என்றால் கேட்கவா வேண்டும்? ஒரு காலத்தில் பாரதியாரைத் தூற்றியவர்கள் இன்று போற்றுகிறார்கள். அதுபோன்றே இன்று சிலர் பாரதிதாசனைத் தூற்றுகிறார்கள் வருங்காலத்தில் போற்றவே செய்வார்கள். தமிழ் கூறும் நல்லுலகில் இன்று ஒப்பாரும் மிக்காருமற்ற தனித் தமிழ்ப் புரட்சிக்கவிஞராய் விளங்குபவர் பாரதியாரின் நற்சிடராகிய பாரதிதாசன் அவர்களே என்று துணிந்து சொல்லலாம்.

மதவாதிகளுக்கு ஒவ்வாதவர். பக்திவான்களுக்குப் பிடிக்காதவர். பழமை விரும்பிகளுக்குப் பாதகமானவர். ஆனால் புத்துலகின் இளைஞர்கட்கு மிகவும் வேண்டியவர். தற்காலத் தமிழக வீரர்களுக்கு வழி காட்டுபவர். தற்காலத்திற்கேற்ற-வாழ்வுக்குகந்த தேன் தமிழ்க் கவிதைகளைப் படைத்துத் தருபவர். மூடக் கொள்கைகளில்லாத தேன் தமிழ்க் கவிதைகளை படைத்துத் தருபவர். சாதி சமய வெறி அற்றவர். மூடக் கொள்கைகளில்லாத முன்னேற்ற வாதி. நல்ல சீர்திருத்தக்காரர். தமிழை நன்காராய்ந்து படித்த பெரும் பேரறிஞர். வேறு பலமொழிகளும் அறிந்தவர்.

தமிழ் சிறப்புற வேண்டும். தமிழகம் தலை நிமிர வேண்டும் தமிழினம் சீர்திருந்திச் செவ்வையாய் வாழ வேண்டும் என்ற எண்ணங்களை அல்லும் பகலும் சிந்தையிற் கொண்டு செயலாற்றி வருபவர். தமிழைத் தம் உயிர்ப் போன்று உண்மையிலேயே பேணுபவர் ஒருவர் இன்று தமிழகத்தில் உண்டென்றால் [illegible] ரைக் கொடு என்றால் கொடுக்கக் கூடிய நிலையில் இன்று தமிழ் நாட்டிலுள்ள ஒருவர் பாரதிதாசனே தான். இதில் எள்ளளவும் ஐயமில்லை.

அவர் ஆக்கிப் படைத்துள்ள கவிதைகள் அநேகம். எழுதிக் குவித்துள்ள நூல்கள் ஏராளம். "பாண்டியன் பரிசு" மிகமிக வேண்டிய தொன்று "குடும்பவிளக்கு" நமது இடும்பையை அகற்றும். தமிழச்சியின் கத்தி" தன் மானங் காக்கும். "காதலா கடமையா?" கற்க வேண்டியதொன்று. "தேனருவி" படித்தால் நாவில் வழிந்தோடும். "இசையமுது" செவிகளில் பண்ணெழுப்பும். "முல்லைக்காடு" சொல்லு முன்பே மணம் வீசும். இத்தகைய முத்தமிழ்ப் பனுவல்கள் ஏராளம். ஒவ்வொரு கவிதையிலும் வரிக்கு வரி தமிழ் மணக்கும்.

பாரதிதாசனின் கவிதைகள் தான் தமிழ். தமிழ்தான் அன்னாரின் அழகுக் கவிதைகள். அவரது கவிதைகளைக் கற்றால் தான் தனித் தமிழின் கனிச் சுவையை உண்டு மகிழலாம். தமிழ் படிக்க விழைவோர் பாரதிதாசனின் எளிய தமிழ்க் கவிதைகளைக் கற்றால் போதும்.

பாரதிதாஸனின் கவிதைகளில் எல்லாமுண்டு. ஓடும் மானுண்டு. ஆடும் மயிலுண்டு. பாடுங் குயிலுண்டு ஒலிக்கும் கடலுண்டு. தண்ணொளி யுமிழும் வெண்ணிலவுண்டு. பொங்கி யெழுப்பும் செங்கதிருண்டு. வீசி வருந் தென்றலுண்டு. பேசி மகிழும் காதலர் உளர். மழலைக் குழவிகளுளர். வயதில் முதியோருளர். எல்லாமுண்டு-எல்லோருமுளர். இத்தகைய இன்றமிழ்க் கவிதைகளைக் கற்போமாக. பாரதிதாசன் வாழ்க!

—"தாமரைத்தீவான்"
ஈச்சந்தீவு.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 1.

பெயர்........................................

பாடசாலை........................................

விலாசம்........................................

........................................

........................ ........................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

2822 சி. சோதிநாதன், சுளிபுரம்.
2823 ச. கணபதிப்பிள்ளை, பருத்தித்துறை
2824 எம். சகீட், திருகோணமலை.
2825 இ. கேதீஸ்வரன், அளவெட்டி. [illegible]
2826 ஆ. தேவராசா, ஒப்பனையக்கா.
2827 த. கோணேஸ்வரன், கொக்குவில் கிழக்கு.
2828 சா. சண்முகநாத சர்மா, திருநெல்வேலி கிழக்கு.
2829 க. முகமது ரெய்ணம், தாராக்குண்டு.
2830 செல்வி பத்மயோகராணி, பம்பலப்பிட்டி.
2831 சி. தவராசா, வேலணை.
2832 செல்வி செல்வநாயகி குழந்தைவேல், யாழ்ப்பாணம்.
2833 ரா. ராமையா, தெஹியோவிற்ற.
2834 செல்வி திலகவதி இராமசாமி யாழ்ப்பாணம்.
2835 அ இராஜேஸ்வரன், யாழ்ப்பாணம்.
2836 இ. நடராஜா, திருகோணமலை.
2837 ஹைறுன் நிசா, குருநாகல்.
2838 க. புவனேசலிங்கம், கல்முனை.
2839 வி. வெங்கடாசலம், கொக்குவில் மேற்கு.
2840 மு. ஆதம்லெவ்வை, பொத்துவில்.
2841 வ. செல்வரத்தினம், கோப்பாய்.
2842 தி. தில்லைஈஸ்வரன், யாழ்ப்பாணம்.
2843 மு. சி. ஸ்ரீதயாளன், கொக்குவில் கிழக்கு.
2844 அருளம்பலம், கலைவாணி, காரைநகர்.
2845 செல்வி இராஜலட்சுமி செல்லப்பிள்ளை, மட்டக்களப்பு.
2846 இ சுகுணசபேசன், நீர்வேலி வடக்கு.
2847 ந. சிவபாலதர்மகுலசிங்கம், மாத்தளை.
2848 ப. சபாநாதன், எண்ணங்கப்பிட்டி மேற்கு.
2849 குமரன் தங்கராசா, பம்பலப்பிட்டி.
2850 செல்வி மு. சி. சிறிபத்மினி, கொக்குவில்.

வள்ளுவர் குரல் : 21

## வான் ஒழுக்கம்

"நீர்இன்று அமையாது
உலகெனின்
யார் யார்க்கும்
வான் இன்று அமையாது
ஒழுக்கு"

ஒழுக்கம் சிறந்தது; வானினும் உயர்ந்தது; உயிரினும் சிறந்ததாக ஓம்பப்படத் தக்கது. அவ்வொழுக்கத்தையும் மக்களிடையே நிலை நிறுத்திக் காப்பது மழை.

மழை பெய்யாது விட்டால், வறுமை மிகும். வறுமைப் பட்டு வருந்தும் மக்களிடத்திலே, ஒழுக்கத்துக்கு இடமேது? இல்லை எதிர்பார்த்து அவர்களைப் பழிக்கலாமா என்று இரங்குகிறார், பொதுமறை தந்த புலவர் பெருமானார். உலகவாழ்க்கையானது மழைநீரில்லாமல் நடைபெற மாட்டாதது போலவே, எப்படிப்பட்டவர்க்கும், மழையில்லாமல் ஒழுக்கம் அமையமாட்டாது.

வாழ்க்கைப் போராட்டம் எவரையும் விடாது. அதிற் சிக்குண்டு வறுமையில் உழலும் போது, மக்கள் ஒழுக்கத்தைக் கைவிட நேர்கின்றது அங்ஙனம் ஒழுக்கத்தைக் கைவிட்டவர்களைப் பழிக்காமல் இரக்கங் கொள்ளவேண்டும். மழை பொழிவதனால் உலக வாழ்க்கை நடைபெறுவது போலவே, மக்கள் மனமும் பண்பட்டு வளப்பட்டு, அவர்கள் ஒழுக்கமும் மேம்பட்டு விளங்க வேண்டும்.

—பா ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## பாரதி இளைஞர் கழகம்

"இன்றைய இளைஞர்கள் எதையும் சாதிக்க வேண்டுமென விழைபவர்கள். அவர்களின் ஆர்வத்துக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும். நாட்டுக்கு நல்ல பணிகளைப் புரியக் கூடிய—புரிய முன் வந்துள்ள இப்பாரதி இளைஞர் கழகத்துக்கு பெரியோர்கள் தங்கள் ஆதரவை நல்க வேண்டும்" இவ்வாறு 14-4-60-ல் வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் நடைபெற்ற பாரதி இளைஞர் கழகத்தின் பொதுக்கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் ஐ. பொன்னையா கூறினார்.

பண்டிதர் அ. பொன்னுத்துரை "இலக்கிய இன்பம்" எனும் தலைப்பிலே ஓர் இனிய இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார். வேலணை மத்திய கல்லூரி ஆசிரியர் பொ. பொன்னுச்சாமி "இளைஞர் கடன்" எனும் தலைப்பிலே இளைஞர்கள் முன்னுள்ள பெரும் பணிகளை எடுத்துக் கூறி அவைகளை செய்ய வேண்டியது இளைஞர்களின் நீங்காக் கடமையாகும் என்றார். பாரதி இளைஞர் கழகத்தினர் அத்தகைய பொது நலத் தொண்டுகள் புரிய முன்வந்ததாக அவர்களைப் பாராட்டினார்.

ஆசிரியர் ச. மகாலிங்கம் பேசுகையில், இக்கழகம் இளைஞர்களின் ஓயாத உழைப்பினால் உருவாகியது என்றும், அந்தத் தூய தொண்டுள்ளங் கொண்ட இளைஞர்களின் ஆக்க முயற்சிகளுக்கு பெரியோர்கள் உதவி செய்து ஊக்கமளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர் தில்லைச்சிவன் "பாரதியும் தமிழும்" எனும் தலைப்பிலே பேசும்போது இக்கழகம் பாரதி காட்டிய பாதையில் சென்று பொது மக்களுக்கு பணி புரியுமென்றார்.

திரு. நா. இராமச்சந்திரன், செல்வன் ஆ. மாணிக்கராசா ஆகியோரும் பேசினர். இடையிடையே சிறுவர்களின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—

## துறைநீலாவணையில் சித்திரை விழா

துறைநீலாவணை அரிசி ஆலைத்தெருவிலுள்ள, வள்ளுவன் திடலில் மறுமலர்ச்சி மன்றத்தாரால் சித்திரை விழா 14-4-60-ல் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

திருவாளர்கள் சு. தங்கராசா, மு. வேலுப்பிள்ளை, சி. அழகரெத்தினம் ஆகியோர் நாட்டுக் கூத்து ஆடி விழாவைச் சிறப்பித்தார்கள்.

திருவாளர்கள் தா. தியாகராசா, க. சோமசுந்தரம், மா. கண்ணப்பன், க. சபாபதி, சி. பூபாலபிள்ளை, சி. நல்லையா, க. சதாசிவம் ஆகியோர் நாடக மேடையை அலங்கரித்தார்கள்.

திருவாளர்கள் துறைநீலாவணைச், செல்லத்துரை ஆசிரியர், ச. ஆறுமுகம் ஆசிரியர், "துறைநீலன்" ஆகியோர்கள் சொற்பொழிவாற்றிப் பேச்சு மேடையை அலங்கரித்தனர்.

திருவாளர்கள் கண்ணன், சோமன் ஆகியோரின் நடனங்கள் மக்களின் அன்பையும், பாராட்டுதலையும், ஆதரவையும் மன்றத்துக்குப் பெற்றுத்தந்தது.

திருவாளர்கள் மார்க்கண்டு, மயில்வாகனன் ஆகியோர் பாட்டுக்கள் பாடி இன்னிசை விருந்தளித்ததுடன் இசை அரங்கைச் சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு திரு. த. சாமித்தம்பி தலைமை தாங்கினார். விழாவின் ஆரம்பத்திலும் இறுதியிலும் மறவர்கானம் பாடப்பட்டது.

—

## இந்து பரிபாலன சபை

திருகோணமலை கடற்படை ஸ்தல இந்து சமய பரிபாலன சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அணிமையில் நடைபெற்ற பொழுது, திருகோணமலை கடற்படை ஸ்தலத்திலுள்ள பிள்ளையார் கோயிலைப் பராபரிப்பதற்கும், கடற்படை ஸ்தலத்தின் ஊழியர்களால் நடாத்தப்படும் இந்து சமயக் கோயிற் திருவிழாக்களை ஒழுங்குறச் செய்வதற்கும் ஒரு ஸ்தாபனம் அத்தியாவசியமான தெனக் கருதியே இக் கூட்டம் கூட்டப்பட்டதென்று கூட்டத்திற்கு தலைமைவகித்த திரு. வீ. பூபாலபிள்ளை தமது முகவுரையில் கூறினார் சபையின் ஏகமனதான சம்மதத்தின் பேரில் மேற் குறிப்பிட்டுள்ள சபை ஸ்தாபிதம் பெற்றது.

சபைக்குரிய சட்ட திட்டம் வாசித்து அங்கீகரிக்கப் பட்டபின் கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் ஏகமனதாய்த் தெரிவு செய்யப்பட்டார்கள்:—

தலைவர்: திரு ச. விசுவநாதன், உபதலைவர்: திரு சு. குட்டித்தம்பி, காரியதரிசி: திரு வீ. பூபாலபிள்ளை, உப காரியதரிசி: திரு அ. மாணிக்கவாசகர், தனாதிகாரி: திரு சி. பொன்னம்பலம். நிருவாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள். எஸ். சின்னத்துரை, மு. இராசையா, கே. கணேசரட்னம், வி. எஸ். அழகராசா, ஏ. செல்லையா, வி. சுப்பிரமணியம், எஸ். துரைராஜா, ஆர். சித்தி விநாயகர், த. ரெத்தினதுரை, பி. மயில்வாகனம், பி. சங்கரப்பிள்ளை, எஸ். வீரசிங்கம், வி. வரதராஜா, எம். கணேசபிள்ளை, எஸ். அழகையா, கே. குமாரகுலசிங்கம், கே. தம்பிராஜா, டி. பொன்னம்பலம், கே. குகதாசன், ஏ. அருணாசலம், பி. சிவசுப்பிரமணியம், பி. எஸ். மார்க்கண்டு, கணக்குப் பரிசோதகர்: திரு பொ இரத்தினசிங்கம்.

—

## எஸ். எஸ். ஆர். கலைமன்றம்

எஸ். எஸ். ஆர். கலைமன்றத்தின் 3-ம் ஆண்டு செயற்கூட்டமொன்று சமீபத்தில் மன்ற இல்லத்தில் ஈ. த. மு. நாடக மன்றத் தலைவர் திரு. ஆர். ஆர். கே. டேலர் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துப் பாவுடன் ஆரம்பித்த கூட்டத்தில் காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுக்காக மௌன அநுட்டானம் எடுத்துக்கொள்ளப்பட்டது: பின்பு கலை ஜோதி மன்ற சார்பில் திரு. பி. மாறனும் முன்னேற்ற நாடக மன்ற சார்பில் திரு. லாகிரும் வாழ்த்திப் பேசினார்கள். கூட்டத்தில் "வெண்ணிலா" என்ற நாடகமும் அதற்கு முன்னர் கலை நிகழ்ச்சியொன்றையும்நடதுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மன்ற உறுப்பினர்களும் தங்களபிப்பிராயங்களை வெளியிட்டனர். இறுதியில் மன்ற பொறுப்பாளர் திரு. நெல்லை முத்துவின் நன்றியுரையுடன் கூட்டம் கலையப் பெற்றது.

—

## இலவச கலவன் இராப் பாடசாலை

கொழும்பு ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப் பாடசாலையின் 8-வது ஆண்டு விழா கடந்த 10-4-60-ல் பாராளுமன்ற பிரதிநிதி திரு. வீ. ஏ. சுகததாஸ தலைமையில் விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது. தலைவர் தலைமையுரைக்குப் பின் விழாக் காரியதரிசி திரு. ஜே. அகுஸ்தீன் பர்னாந்துவால் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டபின் திரு. ஈ. எஸ். தியாகராஜா, திரு. ஏ. வில்பிரட் பர்னாந்து, வித்துவான். எப். எக்ஸ். சி. நடராஜா, திரு. மகாராஜா, திரு. ஏ ஜி. பியசிங்க, தலைமை ஆசிரியர் திரு. அ. ஆ. சுமனதாஸ, பிரதம துணை ஆசிரியர் ஜே. அகுஸ்தீன் பர்னாந்து, சங்கீத டைரக்டர் திரு. கே. எம். சவாயிர், டைரக்டர். திரு. பி. எஸ். கிருஷ்ணகுமார், செல்வர்கள். ச. கந்தநாதன், ஈ. லோறன்ஸ், வியோ பர்னாந்து, செல்வி ச நாகேஸ்வரி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். முடிவில் மாணவ, மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சியுடன் விழா இனிது முடிவடைந்தது.

—

## தொல்புரம் மத்திய சன சமூக நிலையம்

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் வெற்றியைக் கௌரவிக்கும் கூட்டமொன்று கடந்த 15-4-60 வழக்கம்பலை சன சமூக நிலையத்தினரால் நடத்தப் பெற்றது அன்னார் தொல்புரம் மானா முதலியார் மடத்திலிருந்து வரவேற்புபசாரக் கூட்டம் நடைபெறும் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலைக்கு ஊர்வலமாகச் சென்ற போது தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினர் மாலையணிவித்துத் தமது மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

—

## செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் செயற்குழு கூட்டம் சென்ற 20-4-60-ல் மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் எஸ். அன்ரனி பெர்னாண்டோ கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

மன்றத்தின் திங்கள் வெளியீடாக "தேன்மொழி" கையெழுத்துப் பத்திரிகையை வைகாசி மாதம் முதல் வெளியிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பல முக்கிய விடயங்கள் விவாதிக்கப்பட்ட பின் கூட்டம் முடிவுற்றது.

—

## இளந் தமிழர் இயக்கம்

உடுப்பிட்டி இளந் தமிழர் இயக்கத்தின் பொதுக் கூட்டமொன்று அணிமையில் கூடியபோது கீழ்கண்ட நிருவாகிகள் தெரிவு செய்யப் பட்டனர்:—

போஷகர்: இரத்தினசிங்கம், தலைவர்: க. நற்குணம், உப தலைவர்: க. நாகலிங்கம், காரியதரிசி: இ. கணபதிப்பிள்ளை, உப காரியதரிசி: அ. வேலாயுதம், தனாதிகாரி: மு. ஆறுமுகசாமி, உபதனாதிகாரி: வ. தருமலிங்கம், பரிசோதகர்: ந. சத்தியேந்திரா.

—

## உடுப்பிட்டி தமிழரசுக் கட்சி கிளை

உடுப்பிட்டி தமிழரசுக் கட்சிக் கிளையின் பொதுக் கூட்டம் அணிமையில் கூடிய போது கீழ்கண்ட நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: ரூபேட் நவரத்தினம், உப தலைவர்கள்: சி. சா. கணபதிப்பிள்ளை, ம. காங்கேசு, தி. துரைச்சாமி, சி. ஆனந்தராசா, காரியதரிசிகள்: வ. கொலின், இரத்தினசிங்கம், ந. பொன்னுத்துரை, தனாதிகாரி: த. சின்னத்தம்பி, உதவி தனாதிகாரி: தா. கந்தையா, நிர்வாக சபை: பிரசார உத்தியோகத்தர்கள் சி. சிவலோகம், சி. அம்பிகாபதி, காசிப்பிள்ளை, க. செல்வமாணிக்கம், வாசிகசாலை உத்தியோகத்தர்கள்: கா. இராசரத்தினம், கு. திசைவீரசிங்கம், க. ஆறுமுகம், வ. செல்வராசா, சி. சிவலிங்கம், மு. கிருஷ்ணசாமி, வ. இராமலிங்கம்.

# புற்றுநோய்-அதை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லைகள் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்.

8. இது தொற்றுநோயா?

இது தொற்றக் கூடியது என்று சொல்வதற்கு இன்றளவும் சான்று இல்லை.

9 எல்லாவிதக் கட்டிகளும் புற்றாக மாறக் கூடுமா?

பெரும்பாலும் மாறுவதில்லை. ஆயினும் ஒரு புற்றுக் கட்டி தடிப்பு குணம் அடையாமல் நீடித்து இருந்தால், ஒரு டாக்டரிடம் அதைக் காட்டி, சோதித்துக் கொள்ள வேண்டும். மேலும் காலம் தாழ்த்துவது மோசம்.

10. சதாரணமாக எந்த இடங்களில் புற்று உண்டாகும்?

தோலிலும், சளிச் சவ்வுகளிலும், உட்புற உறுப்புக்களிலும்உண்டாகும். சிலருக்குத் தோலில் கறுப்பு மச்சங்களாவது வெண் புள்ளிகளாவது இருக்கும். வாய், தொண்டை, பிறப்பு உறுப்பு ஆகியற்றின் சளிச் சவ்வுகளிலும் வெண்ணிறப் புள்ளிகள் இருக்கலாம். அல்லது வேறு விதமான நிற மாறுபாடுகள் இருக்கும். வாயில் பல் வெட்டி, அல்லது பொய்ப் பற்கள் சரியாகப் பொருந்தாமல், புண் உண்டாகியிருந்து, இவைகளில் ஒன்று திடீரென்று பரவத் தொடங்கினால், அதை உடனே கவனிக்க வேண்டும். வேறு காலத்தில் ஏற்படும் காயங்களைக் கவனமாய் பார்க்காது போனால் அவைகளும் புற்றாகலாம். சில பெண்களுக்குக் கருப்பையின் கழுத்தில் புற்று வைத்திருப்பதற்கு இதுவே காரணம். இரண்டு வாரங்களில் ஆறாத எந்தப் புண்ணையும் அலட்சியம் செய்யாமல், டாக்டரிடம் காட்ட வேண்டும்!

11. கழுத்தில் ஒரு வீக்கம் உண்டானால், அது தானாகத் தணிந்துவிடும் என்று காத்திருப்பது சரியா? அது அபாயம்; எவ்வளவு சீக்கிரம் சிகிச்சையைத் தொடங்குகிறோமோ அவ்வளவு நல்லது.

12. இந்த நோயின் அறிகுறிகள் எவை?

ஏழு அறிகுறிகள் உள்ளன. அவைகளில் யாதேனும் ஒன்று தோன்றினால், அது ஆபத்தைக் காட்டும் குறி என்று அறிந்து நாள் கடத்தாது, நல்ல வைத்தியர்களிடம் காட்டி, தகுந்த பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

(அ) ஆறாத புண்.

(ஆ) மார்பிலாவது வேறு இடத்திலாவது குணப்படாது இருக்கும் கட்டி.

(இ) உடல் துவாரத்தில் இரத்தமாகிலும் துர்நீராகிலும் வருதல்.

(ஈ) மச்சம் நிற மாறுதல் அல்லது பரவுதல்.

(உ) நீண்ட அஜீரணம், உணவு விழுங்க முடியாமை.

(ஊ) குரல் கம்முதல், தீராத இருமல்.

(எ) புதிய மலச்சிக்கல்.

13. இந்த நோயில் வலி இராதா?

பெரும்பாலும் துவக்கத்தில் இராது. ஒரு மனிதனுக்கு இரைப்பையில் ஒரு பெரிய கட்டி இருக்கலாம். ஆனால் தெரியாத தொந்தரவு ஒன்றே ஏற்படுமே தவிர, வலிகாணாது. கட்டி முதிர்ந்த பின் வலிக்கலாம்.

14. டாக்டர்கள் இந்த நோயை எவ்வாறு கண்டு பிடிக்கிறார்கள்?

தோல் புற்றைக் கண்டறிவது கடினம் அல்ல. உள் உறுப்புகளில் இருந்தால் தான் சிரமப்படும். முதலில் உடல் முழுவதையும் தக்க கருவிகளால் சோதிப்பார்கள். அப்புறம் அநேகமாக உட்புற அவையங்களை எக்ஸ்—ரே படம் பிடிப்பார்கள். ஒரு புண் புற்றாக இருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டால், அதிலே ஒரு சிறு துண்டு வெட்டி பரிசோதித்து நிச்சயம் பண்ணுவார்கள்.

15. இதற்கு என்ன சிகிச்சை?

மூன்று விதமான சிகிச்சை முறைகள் இன்று உள்ளன. அறுவை மருத்துவம், எக்ஸ்-ரே சிகிச்சை, ரேடியம் சிகிச்சை.

16. இந்த நோய்க்கு ஒரு முறை மருத்துவம் செய்து கொண்ட பிறகு, அது திரும்பவும் தோன்றுமா?

தோன்றலாம். ஐந்தாண்டு வரை மீண்டும் வராவிட்டால் தான், பிணி குணமாகி விட்டது என்று நம்பலாம்.

17. இந்த நோய் வராமல் தடுக்க என்ன செய்யவேண்டும்?

(அ) உடம்பில் எந்த விதமான உராய்வும் அழற்சியும் நீடித்து இராதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) ஆண்டு தோறும் ஒரு டாக்டரிடம் உடம்பைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

(இ) ஐயப்பாடு உள்ள கட்டிகளுக்கு வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

(ஈ) வாயையும் பற்களையும் நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

(உ) புகை பிடிக்கக் கூடாது.

(ஊ) இருமல் நீடித்து இருந்தால், அதைக் கவனிக்க வேண்டும்.

(எ) இறுக்கமாக ஆடை அணியலாகாது.

(ஏ) தோலைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உடம்பில் தோன்றும் எந்த மச்சத்தையாகிலும் புண்ணையாகிலும் கட்டியையாகிலும் எளிதாகக் கருதலாகாது. அவை புற்றாகப் பரிணமிக்கலாம். அறிவாளிகள் அவற்றை முளையிலேயே [illegible] சொல்வார்கள்!

—நல்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாம் விரும்பும் 4-வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜிதா** (மஸ்கெலியா)

## மற்றும் 3 திரைகளில்

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

நடிகர்கள்: **ஜெமினி கணேசன், பாலையா, ரங்கராவ், தங்கவேலு, சாரங்கபாணி**
டி. ஆர். ராமச்சந்திரன், கருணாநிதி
நடிகைகள்: **சாவித்திரி, ஜமுனா, ஈ. வி. சரோஜா, முத்துலட்சுமி**



ஆகியோர் நடித்த

**விஜயாவின்**

# கடன் வாங்கி கல்யாணம்



பின்னணி பாடியவர்கள்:
ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், எஸ். சி. கிருஷ்ணன், பி. லீலா, பி. சுசீலா, ரத்னமாலா

டைரக்ஷன்:
## பிரசாத்

**கேவா கலர் நடனம்: ஈ. வி. சரோஜா**

**ஸ்டூடியோ : வாஹினி**


இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை [illegible] அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஏப்ரல் 1-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org